வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 01.02.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 58 | பக்கங்கள் : 16

## திருமலை - கன்னியா வெந்நீருற்று சிவன் ஆலயத்துக்கு மீண்டும் பூட்டு!

### தொல்பொருள் திணைக்களமே மூடியது என்கிறது பொலிஸ்

திருகோணமலை, பெப். 01

திருகோணமலை - கன்னியா வெந்நீர் ஊற்று சிவன் ஆலயத்திற்குள் பக்தர்கள் செல்ல முடியாதவாறு பூட்டப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொல்பொருள் அமைச்சு கோயிலை மூடுமாறு பணித்தமையால் தொல்பொருள் திணைக்களம் மூடி விட்டு தமக்கு அறிவித்தல் வழங்கப்பட்டதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை கன்னியா சிவன் ஆலயம் தொடர்பான சர்ச்சைகள் தொடர்பில் மேல் நீதிமன்றில் ஏற்கனவே வழக்கு இடம் பெற்று வருகின்றது. எனினும், ஆலயத்திற்கு சென்று வழிபடு வதற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட தடைகள் நீக்கப்பட்டன. அத்துடன், தொடர்ந்தும் பக்தர்கள் வழிபட அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே இப்போது மீண்டும் ஆலயத்துக்கு தொல்பொருள்

15

## வடக்கில் நேற்று 19 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், பெப். 01

வடக்கில் நேற்று 19 புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வகத்தில் நேற்று நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனையிலேயே இந்தத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

இதன்படி, யாழ்ப்பாணம்

15

## உத்தேச அரசியலமைப்பின் மூலம் இனப்பிரச்னைக்கு தீர்வு கிடைக்காது!

### அரசின் பங்காளி தலைவர் திஸ்ஸ விதாரண

- காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி அரசின் பொறுப்பு
- இனப்பிரச்னை தீர்வுக்கு பொதுக் கட்டமைப்பு அவசியம்



கொழும்பு, பெப்ரவரி 01

"காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்கு தீர்வு வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு முழுமையாக உள்ளது. நாம் வாக்குறுதி வழங்கவில்லை என ஒருபோதும் தட்டிக்கழிக்க முடியாது. உத்தேச அரசியலமைப்பில் இனப்பிரச்னைக்கு தீர்வு கிடைக்கப் பெறும் என்று இதுவரையில் நான் நம்பவில்லை" என்று அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

15

## மேலும் 21 பேர் தொற்றினால் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 01

நாட்டில் மேலும் 21 பேர் கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால், நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டதாக, அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் கொவிட்-19 தொற்றினால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 15,441 ஆக உயர்வடைந்துள்ளது. (அ)

## இந்திய மீனவர்களால் எமக்கு அநீதி!

### சுப்பர்மடம் மீனவர்கள் போராட்டம்!!



வடமராட்சி, பெப். 01

கடந்த இரவும் பல இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் அத்து மீறும் இந்திய மீனவர்களின் படகுகளால் அறுத்து நாசமாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பருத்தித்துறை சுப்பர் மடம் மீனவர்கள் வீதி மறியல்

15

## ஏற்கனவே நடந்த பிரச்னைகளுக்காக நேரத்தை வீணடிக்க தேவையில்லை!

### ஜெனிவா விவகாரத்தில் அரசின் நிலைப்பாடு இது என்கிறார் பீரிஸ்!



யாழ்ப்பாணம், பெப். 01

"இலங்கையில் நடந்தது உள்நாட்டு பிரச்னை. பல வருடமாக இடம் பெற்ற ஒரு உள்நாட்டுப் பிரச்னை. உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை அதிக பிரச்னைகள் கொண்ட நாடு இல்லை. அத்துடன், ஏற்கனவே நடந்த பிரச்னைகளுக்காக நேரத்தை வீணடிக்க தேவையில்லை.", இப்படிக் கூறியிருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்.- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ்.

இந்த வருட மார்ச்சில் ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது. அந்தக் கூட்டத்தொடரில் இது தற்போதைய கோட்டாபாய அரசாங்கத்தின் நிலைப்பாடு

15

## சுகாதார வழிகாட்டுதல்கள் பெப்ரவரி முழுவதும் நீடிப்பு

கொழும்பு, பெப். 01

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களை இந்த மாதம் முழுவதும் தொடர்ந்து செயல்படுத்த சுகாதாரத் துறையின் பிரதானிகள் தீர்மானித்துள்ளனர். இதன்படி, இது வரை நடை

15

## மறு அறிவித்தல் வரை மின் துண்டிப்பு இல்லை

கொழும்பு, பெப். 01

மறு அறிவித்தல் வரை திட்டமிடப்பட்ட மின் துண்டிப்பு மேற்கொள்ளப் படமாட்டாது என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்று வரையில் மின் துண்டிப்பு இடம்பெறாது என பொதுப் பயன்பாடுகள்

15

## காணாமல் போன மீனவர்கள் இருவரும் சடலங்களாக மீட்பு!

### வடமராட்சி கிழக்கில் சோகம்

வடமராட்சி, பெப். 01

வடமராட்சி கிழக்கு வத்திராயனிலிருந்து கடலுக்கு சென்று காணாமல் போன இரண்டு மீனவர்களும் சடலங்களாக மீட்கப்பட்டனர். யோசேப்

15

## இப்படியும் நடக்கிறது...!

தெற்கில் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கவேண்டும் என்று கருதுகின்ற சில இடதுசாரித் தலைவர்கள் இருக்கி றார்கள்.

அவர்களில் முக்கியமானவர்கள், இலங்கைக் கம்யூனிஸ் கட்சி, மற்றும் லங்கா சமசமாஜக் கட்சியினர்தான்.

இவர்கள் மிக நீண்டகாலமாக முன்னர் சுதந்திரக் கட்சியுடனும், இப்போது மஹிந்தவின் பொதுஜன பெரமுனவோடும் சேர்ந்து அரசியல் செய்துவருகின்றனர்.

முன்னர் சிறிமா ஆட்சிக்காலத்தில் தயாரிக்கப்பட்ட குடியரசு அரசியலமைப்பில் தமிழர்கள் புறக்கணிக்கப்படு வதற்கும் இந்த கட்சிகளின் தலைவர்கள் ஒத்தூதினார்கள் என்பது வேறு விடயம்.

ஆனால், இப்போது, குறிப்பாக லங்கா சமசமாஜக் கட்சி யின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, வெளிப்படை யாகவே தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று பரப்புரை செய்பவர்.

மஹிந்தரின் முதலாவது ஆட்சிக்காலத்தில் பல ஆண்டு களாகக் கூடி ஆராய்ந்த சர்வகட்சி கூட்டங்களுக்கு தலைமை தாங்கியவர் இந்த பேராசிரியர் திஸ்ஸ விதாரண. அவர் அந்த சர்வகட்சி மாநாட்டின் முடிவில் சமர்ப்பித்த இறுதி யோசனையும் பலராலும் பாராட்டப்பட்ட ஒன்று,

தமிழ் மக்களோடு சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்றும், இன ஒற்றுமையையும் வலியுறுத் தும் அவர்கள், மஹிந்தவின் கட்சியிலிருந்து தமக்குக் கிடைக்கும் தேசியப் பட்டியல் ஆசனங்களை தாங்களே பங்குபோட்டுக்கொள்வார்கள்.

இன ஐக்கியம் பற்றி பேசுகின்ற அவர்கள் தமக்கு கிடைக் கின்ற அந்த பதவியை சிறுபான்மையினருடன் பங்குபோட் டுக்கொள்ள என்றுமே முன்வந்ததில்லை.

அதாவது, இன ஐக்கியம் உதட்டில் மாத்திரமே.

இது எதற்காக இப்போது என்று நீங்கள் நினைக்கலாம்.

சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா நேற்றுமுன்தினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டி ருந்தார்.

நியாயமான கேள்விகள் சில அந்த அறிக்கையில் இருந்தன.

'ஆறு கட்சிகள் கூடின. தங்கள் வட, கிழக்கு இணைப்பு, இலங்கையில் இணைப்பாட்சி, இலங்கை - இந்திய ஒப்பந் தம் முதற்படி அன்றி முழுமையான தீர்வு அல்ல என்பன பற்றி சொன்னார்கள்.

யார் சொன்னார்கள்? வலிகாமம் சேர்ந்த நான்கு பேரும், மன்னார் ஆயரின் ஆளும், தீவுப் பகுதியை சேர்ந்தவரும் சேர்ந்து சொன்னார்கள்.

வலிகாமம் வட, கிழக்கு ஆகாது.

தீவுப்பகுதி, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி என யாழ்ப்பாண குடாநாட்டின் நான்கு பிரிவுகள்.

கிளிநொச்சி, பூநகரி, புதுக்குடியிருப்பு, கரைச்சி, மாங் குளம், முல்லைத்தீவு, மல்லாவி, நெடுங்கேணி, வவுனியா, செட்டிகுளம், மடு, மாந்தை, நானாட்டான், முசலி, மன்னார் இவை வன்னியின் பிரிவுகள்.

குச்சவெளி, திருகோணமலை, தம்பலகாமம், மூதூர், ஈச்சிலம்பற்று, கோரளைப்பற்று, மட்டக்களப்பு, அக்கரைப் பற்று, கல்முனை, அம்பாறை, பொத்துவில் இவை கிழக்கு மாகாணப் பிரிவுகள்.

ஆறு மாவட்டங்களில் மலையகத்தில் சொரியலாக வாழ்கின்ற தமிழ் பழங்குடியினர்.

மேற்கு மாகாணத்திலும் வடமேல் மாகாணத்தில் இராவணன் காலந்தொட்டே வாழ்கின்ற தமிழ் பழங்குடியினர்.

இவர்கள் யாவருக்கும் வலிகாமத்தின் நான்கு பேரும் தலைவர்களா? வலிகாமத்தார் தமிழருக்காக தன் தீர்மானத் துக்கு வர முடியுமா?'

இப்படி கேள்வி எழுப்புகிறது சச்சிதானந்தம் அவர்களின் அறிக்கை.

நியாயமான கேள்விதான்.

ஆனால், அதுசரி ஐயா, நீங்கள் தொடங்கி நடத்திவரு கின்ற சிவசேனை அமைப்புக்கும் - கட்சிக்கும் நீங்கள் தானே தலைவர்.

முதலில் உங்கள் அமைப்பிற்கு ஒருவரை கிழக்கிலி ருந்தோ மேற்கிலிருந்தோ தெரிவுசெய்துவிட்டல்லவா மற்றவர்களை நோக்கி கைநீட்டவேண்டும் என்று கேட்க ாமல் இருக்கமுடியவில்லை.

- ஊர்க்குருவி




# கொலை அச்சுறுத்தல் விடுத்து ஊடகவியலாளர் மீது தாக்குதல்

### அவர் காயமடைந்து வைத்தியசாலையில்

வடமராட்சி, பெப். 01

சாவகச்சேரி - கச்சாய் வீதிப் பகுதியில் மின்சார சபையை அண்மித்து நேற்று திங்கட் கிழமை மதியம் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற ஊடகவியலாளர் மீது வானில் வந்தோர் தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றிருப்பதாக சாவகச்சேரி பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரியைச் சேர்ந்த தவராசா சுபேசன் என்ற 27வய தான ஊடகவியலாளரே இவ் வாறு முகம் மற்றும் கைகளில் தாக்குதலுக்கு இலக்கான நிலை யில் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்ட பின்னர் கச்சாய் வீதி ஊடாக சென்ற ஊடகவியலா ளரை மோதிக் காயப்படுத்தும் வகையில் வான் ஒன்று ஊடக வியலாளர் பயணித்த மோட் டார் சைக்கிளின் முன்பாக நிறுத்தப்பட்டது.

பின்னர் வானில் இருந்தவர் களில் ஒருவர் பொல்லுகள் மற்றும் கல் ஆகியவற்றால் ஊடகவியலாளரை தாக்கிக் கொலை மிரட்டல் விடுத்து விட்டு வானில் ஏறி தப்பிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவ கச்சேரி பொலிஸார் முன்னெ டுத்துள்ளனர்.

(அ-02-03)

## 500 கர்ப்பவதிகளுக்கு கொரோனா தொற்று!

கொழும்பு, பெப். 01

நாட்டில் 500 கர்ப்பவதித் தாய்மார்களுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில், குடும்பநலப் பிரிவின் பணிப்பா ளர் விசேட வைத்தியர் சித்ர மாலி டி சில்வா இதனை தெரிவித்தார்.

கர்ப்பவதித் தாய்மார் களுக்கு கொரோனா தொற்று ஏற்படுவது தற்போது அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

## வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று கொடியேற்றம்!

வடமராட்சி, பெப். 01

வரலாற்று பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் கடந்த வருடத்துக்கான பெருந்திரு விழா இன்று செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இந்தப் பெருந்திருவிழா தொடர்ந்து 17 தினங்கள் நடை பெறவுள்ளது. சிறப்புத் திரு விழாக்களான வெண்ணைத் திருவிழா 9ஆம் திகதி புதன் கிழமையும், துகில் திருவிழா வும் 10ஆம் திகதி வியாழக்கிழ மையும், பாம்புத் திருவிழா 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யும், கம்சன் போர்த் திருவிழா 12 ஆம் திகதி சனிக்கிழமையும், வேட்டைத்திருவிழா 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், சப்பைரதத் திருவிழா 14 ஆம் திகதி திங்கட்கிழமையும், தேர் திருவிழா 15 ஆம் திகதி செவ் வாய்க்கிழமையும், சமுத்திரத் தீர்த்தத் திருவிழா 16 ஆம் திகதி புதன்கிழமையும், கேணித்திரு விழா 17 ஆம் திகதி வியாழக் கிழமையும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம் பெறுவுள்ளன.

கடந்த வருடம் (2021) செப் ரெம்பர் மாதம் நடைபெற வேண்டிய பெருந்திருவிழா கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக இந்த ஆண்டு பெப் ரவரி மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

(ஐ - 2)

## எரிவாயு அடுப்பு நேற்று கிளிநொச்சியில் வெடிப்பு

கிளிநொச்சி, பெப் 01

எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவம் ஒன்று கிளிநொச்சியில் பதிவானது.

கிளிநொச்சி இராமநாதபுரம் 6ஆம் யூனிற் பகுதியில் நேற்று இந்த சம்பவம் இடம்பெற்றுள் ளது.

காலை சமையலில் ஈடுபட் டுக்கொண்டிருக் கும்போது திடீர் என அடுப்பில் வெடிப் புச் சத்தம் கேட்டதை அடுத்து வீட்டில் இருந்த அனைவரும் அச்சத்தில் வெளியேறியுள்ள னர்.

சிறிது நேரத்தின் பின்னர் வீட்டினுள் சென்று எரிவாயு அடுப்பின் ரெகுலேட்டரை அகற்றிய பின் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியதாக வீட்டார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பாக தெரிவத்ததை யடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த அவர்கள், அடுப்பு வெடிப்புச் சம்பவம் தொடர் பாக பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# விமானப்படைக்கு ஒரு கோடி ரூபாய் நிலுவை வைத்த அரசியல்வாதிகள்!

கொழும்பு, ஜன.01

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பிரபுக்கள் பயணம் செய்வதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள விமானங்க ளுக்காக விமான படையின ருக்கு ஒரு கோடியே 25 இலட் சம் ரூபாய்க்கும் மேற்பட்ட நிதியை செலுத்த வேண்டி யுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி நிதியை செலுத்தா மல் தவறவிட்டுள்ள நிறுவ னங்களில் அமைச்சுக்கள் உள்ளிட்ட 10 அரச நிறுவனங் களும் இரண்டு தனியார் நிறு வனங்களும் உள்ளடங்குவதாக அந்த அலுவலகம் வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க விமானப் படையினரிடமிருந்து 2003 - 2013 வருடங்களுக்கு இடை யிலான காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட விமானங் களுக்கு 60 இலட்சத்துக்கு அதிகமான நிதியும் 2013ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட விமானத்திற்கு மேலும் 60 இலட்சம் ரூபாய் நிதியும் செலுத்தப்பட வேண்டி யுள்ளதாகவும் அந்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இதுவரை அந்த நிதி செலுத்தப்படவில்லை என்றும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
01.02.2021 செவ்வாய்க்கிழமை
ஈළනාඩු
பிலவ வருடம், தை 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அரசியல் தெளிவு அவசியம்

தமிழ் தேசிய அரசியல் சூழலில் நிலவும் தேர்தல் போட்டியானது, மக்கள் மத்தியில் தேவையற்ற குழப்பங்களை விதைக்க முயற்சிக்கின்றது. அதாவது, ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு விடயத்தை அனுசரித்து சென்றால், பின்னர் அதனை விடவும் உயர்வான தீர்வொன்றை பெறமுடியாமல் போய்விடும் - என்றவாறான, ஒரு போலியான பரப்புரை செய்யப்படுகின்றது. உதாரணமாக, இன்று அரசியல் யாப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரினால், அதன் பின்னர் எல்லாக்காலத்திலும் தமிழர்கள் ஒற்றையாட்சிக்குள்தான் சீவிக்க நேரிடும் என்றவாறான போலியான வாதம் முன்வைப்படுகின்றது. இது உண்மையா?

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை தேடிய தந்தை செல்வநாயகம் தான் - பின்னர், 1976இல் பிரிந்து செல்லும் வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்வைத்தார். வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்வைத்த அதே தமிழர் விடுதலைக் கூட்டணியே பின்னர் மாவட்ட சபையை ஏற்றுக்கொண்டது. அதே தமிழர் விடுதலைக் கூட்டணியே பின்னர், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட மாகாண சபை தேர்தலில் போட்டியிட மறுத்தது. இந்தப் பாரம்பரியத்தில் வந்த இரா. சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு - பின்னர், மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு முன்னைய நிலைப்பாட்டிலிருந்து விலகியது.

தனிநாடு கோரி போராடிய விடுதலைப் புலிகள் இயக்கம், நோர்வேயின் சமாதான ஒப்பந்த காலத்தில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை கோரிக்கையை முன்வைத்திருந்தது. இடைக்கால தீர்வொன்றை கோரியதால், பிரபாகரன் - அவரின் தனிநாட்டு நிலைப்பாட்டை கைவிட்டிருந்தாரா? நிச்சயம் இல்லை. பிரபாகரன் - பிரேமதாஸ இணக்கப்பாட்டு காலத்தில், மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதையும் புலிகள் பரிசீலித்திருந்தனர். எனினும், பிரேமதாஸ வாக்குறுதி அளித்தவாறு நடந்து கொள்ளாமையால் அது நடைபெறவில்லை. இது தொடர்பில் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தின் மனைவி எழுதிய சுதந்திர வேட்கை நூலில் விபரிக்கப்பட்டிருக்கின்றது. தான் இதுபற்றி பாலாவிடம் கேட்டதாகவும் - அதற்கு பாலா, சிங்கள மக்களுடன் இணக்கப்பாட்டுடன் வாழ்வதற்கான ஏற்பாடுகளை சோதித்துப் பார்ப்பதில் தவறில்லையென்று கூறினாரெனவும் அவர் தனது நூலில் விபரித்திருக்கின்றார்.

மக்கள் மத்தியில் பரப்பப்படும் தேவையற்ற அச்சங்களை, பதற்றங்களை போக்கும் நோக்கில்தான் இந்த விடயங்களை இங்கு பதிவு செய்கின்றோம். அரசியல் தீர்விற்கான முயற்சிகள் என்பது ஒரு தனிப் பாய்ச்சலில் நடந்துவிடும் ஒன்றல்ல என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். பெரும் படை பலத்தை வைத்திருந்த விடுதலைப் புலிகளே இடைக்கால தீர்வு பற்றி சிந்தித்திருக்கும்போது, ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டுமே வைத்திருக்கும் நமது தமிழ் தேசிய கட்சிகளால் என்ன செய்துவிட முடியும்? இதனை விளங்கிக் கொண்டால் தேவையற்ற ஆரவாரங்களை தவிர்க்கலாம். அனைவரும் ஓரணியாக முன்செல்வது தொடர்பில் சிந்திக்கலாம். இன்று 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலுள்ள மாகாண சபையை பலப்படுத்துவது தொடர்பில் கோரிக்கை வைப்பதால், சமஷ்டி நோக்கிய நகர்வுகளில் எந்தவொரு சிக்கலும் ஏற்படாது. அவ்வாறு கூறுவது மக்களை குழப்புவதற்காக சொல்லப்படும் ஒரு பொய்யாகும்.

# சமஷ்டியே காத்திரமான தீர்வாக அமைய முடியும்!

**அலசுவது இராஜதந்திரி**

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை வன்மையாக எதிர்த்ததோடு அந்தத் திருத்தச்சட்டம் மரணித்துவிட்டது என்று பறைசாற்றுவது போல பிரேதப் பெட்டி ஊர்வலம் ஒன்றை தமிழ் தேசிய மக்கள் முன்னணி வடக்கே நடத்தியதோடு சமஷ்டி அமைப்பை இந்தியா வலியுறுத்த வேண்டுமென்ற பிரகடனத்தையும் வெளியிட்டிருந்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைத்த பிரகடனத்தில் குறை காண முடியாது. ஏனெனில், தமிழருக்கான சமஷ்டி அடிப்படையிலான நிர்வாக முறையை முதலில் வழங்குவதற்கு விருப்பத்தை 1926ஆம் ஆண்டு வெளியிட்டவர் எஸ். டபிள்யயூ. ஆர். டி பண்டாரநாயக்க என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயினும், பண்டாரநாயக்க கொண்டு வந்திருந்த தமிழருக்கான சமஷ்டி அமைப்பு யோசனையை முதலில் நிராகரித்தவர்கள் யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்டம் பற்றி விளக்கமளித்து பேசுவதற்கு அன்று எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க யாழ்ப்பாணத்துக்கும் சென்றிருந்தார். ஏராளமானோர் பங்குபற்றிய அந்த கூட்டத்தில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வே ஒரு நல்ல தீர்வாக அமைய முடியும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

நிறையவே அறிஞர்கள் மற்றும் அரசியல்வாதிகள் பங்குபற்றிய அந்தக் கூட்டம் கலாநிதி ஐசக் தம்பையாவால் தலைமை தாங்கி நடத்தப்பட்டிருந்தது. எத்தகைய வடிவில் எதிரப்புகள் தோன்றினாலும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வே இலங்கையில் இனப்பிரச்னைக்கு தீர்வாக அமைய முடியும் என்று காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அழுத்தம்திருத்தமாக தமது யாழ்ப்பாண கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இருந்தபோதிலும் அன்றிருந்த கற்றுத்தேர்ந்த தமிழ் புத்திஜீவிகளே சமஷ்டி அடிப்படையிலான தீர்வுத்திட்டத்தை எதிர்த்திருந்தனர். இதற்குக் காரணம் அவர்கள் அன்று கொழும்பில் ஆங்கிலேயரின் ஆட்சியில் மிக முக்கிய பதவிகளில் இருந்தனர். இதன் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வுத்திட்டம் கிடைக்குமேயானால் தலைநகரில் தமது முக்கியத்துவம் தேசிய ரீதியாக குறைவடைந்துவிடும். அத்துடன், பிராந்திய ரீதியிலான அரசியல்வாதிகளின் முக்கியத்துவம் மேலோங்கி விடும் என்ற எண்ணம் அன்று தமிழ் அரசியல், புத்திஜீவிகளிடம் காணப்பட்டிருந்தது.

இதன்காரணமாகவே தமது சுயநல அரசியலை முன்னிறுத்தி அன்று இளம் சிங்கள தலைவராக இருந்த எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்க தெரிவித்த சமஷ்டி நிர்வாக முறைமையை தமிழ் புத்திஜீவி அரசியல்வாதிகள் நிராகரித்திருந்தனர். இருப்பினும், இலங்கை 1948ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்ற போது சிங்கள பெரும்பான்மை மக்களின் ஆளுமை மேலோங்கியதையடுத்தே வடக்கு - கிழக்கு தமிழர்கள் தமது தனித்துவம் பற்றி கரிசனை கொண்டதோடு இனரீதியான வேறுபாடுகளுக்கு தீர்வு காண சமஷ்டி முறையின் முக்கியத்துவத்தை உணர்ந்தனர்.

இலங்கை சுதந்திரமடைந்து எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதியோடு 74 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இருந்தபோதிலும் ‘கழுதை தேய்ந்து கட்டெறும்பான’ கதையாகவே இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

1987ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் கூட இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களை கொண்டதாக காணி அதிகாரம், மற்றும் சிவில் நிர்வாகம், பொலிஸ் நிர்வாகம் போன்றவற்றுக்கான ஒரு ‘திறவு கோலாக’ அமைந்திருக்கின்றது.

ஆனால், 13ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டுவருவதில் முன்னின்ற இலங்கையின் தமிழ் தலைவர்கள் மட்டுமல்ல. அன்றைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கூட கொலை செய்யப்பட்டதே இலங்கையில் வடக்கு - கிழக்கு அரசியலில் ஒரு கறைபடிந்த வரலாற்றை ஏற்படுத்தியிருந்தது.

இத்தகைய பின்னணியில் தற்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணி மீளவும் சமஷ்டி கோரிக்கையை முன்வைத்துள்ளது. ஆனால், இக்கோரிக்கைகாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி ‘அகலக்கால்’ வைப்பதையே அவதானிக்க முடிகின்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றிலுமாக நிராகரித்து சமஷ்டி முறையை நோக்கி நகர முடியாது. ஏனெனில், ஒரு சமஷ்டி முறைக்கான அடிப்படை அம்சங்கள் பலவற்றை 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கத்தை மேலும் மெருகூட்டமுடியும். சமஷ்டி முறையை இந்தியா வலியுறுத்த வேண்டுமென்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி கோஷமிட்டுள்ளது. ஆனால், இந்தியாவே 13ஆவது திருத்தச் சட்டத்தின் சூத்திரதாரியான நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கோருகின்ற சமஷ்டி கோரிக்கையை 13ஆவது திருத்தச் சட்டத்தை மையமாக வைத்தே இந்தியா பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

‘வெண்ணெயை கடையவே நெய் உருவாகும்.’ எனவே கையில் வெண்ணெய் போன்றிருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை மேலும் மேம்படுத்தி நெய் போன்ற காத்திரமான சமஷ்டி அமைப்பை ஏற்படுத்திக் கொள்வதே சிறந்த அரசியல் மதியூகமாக அமைய முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
எதிர்ப்புகள் விலகும். முன்பு இருந்த பயங்கள் நீங்கும். உங்களது முன்னேற்றத்தில் இருந்து வந்த தடைகள் நீங்கும். அலைச்சலையும், வேலைப்பளுவையும் சமாளிப்பீர்கள்.

**இடபம்**
பணியிடத்தில் கூடுதல் கவனத்துடன் இருப்பீர்கள். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.வாழ்க்கைத்துணையை அனுசரித்து செல்வது நல்லது.

**மிதுனம்**
வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர். பொறுப்புகள் கூடும். உங்களது செல்வாக்கை கண்டு சிலர் பொறாமை கொள்வர் உழைப்பால் முன்னேறுவீர்கள். உங்களின் புகழ் கூடும்.

**கடகம்**
உங்களது வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். கூடுதல் நேரம் ஒதுக்கி உங்களது பணியை முடிக்க வேண்டி வரும். தொழில், வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது.

**சிம்மம்**
பதவி உயர்வு கிடைக்கும். அரசாங்க வகையில் நன்மை உண்டு. கைவிட்டுப் போன பொருள் ஒன்று இன்று மீண்டும் கிடைக்கும் குடும்ப நன்மை கருதி சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கன்னி**
பணியை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். சேமிக்கும் எண்ணம் தோன்றும். பிரிய மானவர்களின் சந்திப்பு நிகழும். சுபச்செலவு ஏற்படும். பணியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்**
வீட்டுப் பராமரிப்புச் செலவு ஏற்படும். பயம் நீங்கும். தேவையில்லாத வாக்குவாதங்கள், மன வருத்தங்கள் ஏற்படும். சிறு தாமதங்கள் இருந்தாலும் உங்களது முயற்சி நிறைவேறும்.

**விருட்சிகம்**
வாக்குவாதத்தில் பங்கேற்காமல் அமைதியாக இருப்பது நல்லது. சிறு தொலைவுப் பயணம் ஒன்று நன்மை தரும். சாதுர்யமாக செயல்பட்டு பிறரது பாராட்டுக்களை பெறுவீர்கள்.

**தனுசு**
உங்களது திறமையை நிரூபிக்க கூடுதல் முயற்சி செய்ய வேண்டியிருக்கும். பிறரது மனம் புண்படும் வகையில் நகைச்சுவையாக பேச வேண்டாம். உங்களின் செல்வாக்கு கூடும்.

**மகரம்**
பணியில் அலட்சிய போக்கைக் கைவிட வேண்டும். தந்தைக்கு நன்மை விளையும். தைரியம் கூடும். நட்பு வட்டம் விரியும். குடும்பத்தில் குதுாகலம் அதிகரிக்கும்.

**கும்பம்**
விடாமுயற்சி வெற்றி தரும். உறவுகள் பலப்படும். எதையும் எதிர்த்து நிற்பதை விடுத்து நியாயத்தை அனுசரியுங்கள். பெற்றோரின் கோபம் தீரும். எதிர்பாராத உதவி கிடைக்கும்.

**மீனம்**
உங்களுக்கு கடமைப்பட்டிருந்த நண்பர் ஒருவர் உதவி செய்வார். எதிர்பாலினத்தைச் சேர்ந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த வருமானம் இருக்கும். எதிலும் அதிக கவனம் தேவை.

# அ.தி.மு.கவுடனான கூட்டணியில் பிளவு; தேர்தலில் பா.ஜ.க. தனித்து போட்டியிடும்

## அண்ணாமலை அதிகாரபூர்வமாக அறிவிப்பு

சென்னை, பெப். 01,

நகர்புற உள்ளாட்சி தேர்தலில் பா.ஜ.க. தனித்துப்போட்டியிடும் என அக்கட்ட்சியின் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை உத்தியோக பூர்வமாக நேற்று தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் என 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் பெப்ரவரி 19ஆம் திகதி ஒரேகட்டமாக நடைபெறவுள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் 22ஆம் திகதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்படுகிறது.

இதில் அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையேயான கூட்டணி பேச்சுவார்த்தையில் தொடர்ந்து இழுபறி நீடித்து வந்தது. இடப்பங்கீடு தொடர்பாக அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே இழுபறி நீடித்தது.

25 சதவீத இடங்கள் வரை பா.ஜ.க. எதிர்பார்ப்பததாகவும், ஆனால், பா.ஜ.கவுக்கு 4 முதல் 5 சதவீத இடங்களை மட்டுமே அதிமுக ஒதுக்க வாய்ப்பு இருந்ததாகவும் தகவல் வெளியானது. இதனால், கூட்டணி இடையே தொடர்ந்து இழுபறி நீடித்தது.

இந்நிலையில், பாஜக தனித்துப்போட்டியிடும் என அக்கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

நகர்புற உள்ளாட்சி தேர்தலில் பாஜக தனித்து போட்டியிடும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டதால் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

# தி.மு.க.வுடன் இடஒதுக்கீட்டு பேச்சில் ம.தி.மு.க. தலைமை கடும் அதிருப்தி!

## எதிர்த்து வெளிநடப்புச் செய்தனர்

சென்னை, பெப். 01,

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் திமுக உடனான பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாத நிலையில் துரை வைகோ தலைமையில் ம.தி.மு.க அவசர ஆலோசனைக் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது.

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருகிற 19 ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி ஆளும்கட்சியான திமுக தனது கூட்டணி கட்சிகளுடன் இட பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. திமுக கூட்டணியில் காங்கிரஸ், மதிமுக, விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மனித நேய மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

நகர்புற உள்ளாட்சி தேர்தலில் திமுக கூட்டணியில் மதிமுகவிற்கு தமிழகம் முழுக்க அனைத்து மாவட்ட அளவிலான பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டவில்லை. நேற்றைய தினம் சென்னை திருவள்ளூர் மாவட்டம் சார்பில் திமுகவுடன் நடந்த பேச்சுவார்த்தையில் மதிமுகவினருக்கு 5 இடத்துக்கும் குறைவாகவே ஒதுக்கப்படுவதாக குற்றம் சாட்டி, பேச்சுவார்த்தையில் இருந்து பாதியிலேயே வெளி நடப்பு செய்தனர்.

இந்நிலையில் ம.தி.மு.க பொது செயலாளர் வைகோ கொரொனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவரின் மகன் துரை வைகோ தலைமையில் நேற்று மாலை அவர்களது தலைமையகமான தாயகத்தில் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது,

# கோட்சே பெயரை சொல்லக்கூடாது என பொலிஸார் தடுத்தது எதற்காக?

## கேள்வி எழுப்புகிறார் திருமாவளவன்



சென்னை, பெப். 01,

காந்தி நினைவுநாளில் கோவையில், உறுதிமொழி ஏற்கும் நிகழ்வின்போது அங்கு வந்த பொலிஸார் அதனைத் தடுத்துள்ளனர் என்று கூறியுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், இது அதிகார வரம்புமீறல் என்றும், காவல்துறையில் கோட்சே வாரிசுகள் என்றும் குறிப்பிட்டு, இது குறித்து அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“காந்தி நினைவு நாளை யொட்டி கோவையில் “மக்கள் ஒற்றுமை மேடை“ என்னும் அமைப்பின் ஒருங்கிணைப்பில் சனாதன பயங்கரவாதத்திற்கு எதிராக உறுதிமொழி ஏற்றுள்ளனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான தோழர் ஜி.இராமகிருஷ்ணன் அவர்கள் சொல்லச் சொல்ல மற்றவர்கள் திரும்பச் சொல்லி உறுதிமொழி ஏற்கும் நிகழ்வின்போது திடுமென காவல்துறையினர் அங்கே வந்து அதனைத் தடுத்துள்ளனர்.

காந்தியைக் கொன்றது கோட்சே என்றும் ஆர்எஸ்எஸ் பயங்கரவாதிகள், இந்து மத வெறியர்கள் என்றும் கூறக் கூடாதென அப்பகுதியைச் சார்ந்த காவல் துணைக் கண்காணிப்பாளரும் வேறு சில காவல் அதிகாரிகளும் தடுத்து வாக்குவாதம் செய்துள்ளனர். இந்த நிகழ்வு மிகுந்த வியப்பையும் அதிர்ச்சியையும் அளிக்கிறது.

ஏன் கோட்சே பெயரைச் சொல்லக்கூடாது என தடுத்தார்? காந்தியடிகளைக் கோட்சே கொல்லவில்லை என்று நம்புகிறாரா? அல்லது காந்தியடிகள் கொல்லப்படவே இல்லை; வேறு காரணங்களால் இறந்தார் என கருதுகிறாரா?“ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீட் தேர்வை இரத்து செய்ய கோரும் தீர்மானத்துக்கு காங்கிரஸ் ஆதரவு

சென்னை, பெப். 01,

நீட் தேர்வை ரத்து செய்யக் கோரும் திமுகவின் தீர்மானத்தை காங்கிரஸ் எம்.பி.க்கள் ஆதரிப்பார்கள் என்று தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே.எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

**கே.எஸ்.அழகிரி**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழகத்திலுள்ள கிராமப்புற ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் எதிர்காலத்தை பாழடித்து, மருத்துவக் கனவை சிதைத்து வருகிற நீட் தேர்விலிருந்து விலக்கு பெறுகிற வகையில், தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற தமிழக ஆளுநர் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காததைக் கண்டித்து தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட தமிழக மக்களவை உறுப்பினர்கள் எதிர்ப்பை தெரிவிக்க இருக்கிறார்கள்.

இதை காங்கிரஸ் கட்சி ஆதரிப்பதோடு, நடைபெறும் எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்” என்று கே.எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

# 14 ரயில் சேவைகள் ரத்து

கொழும்பு, பெப். 01

சில ரயில் மார்க்கங்களின் 14 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டுப்பாட்டாளர்கள் பலருக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளதால் இவ்வாறு ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, பிரதான ரயில் மார்க்கத்தின் 6 ரயில் சேவைகளும், களனி வெளி மற்றும் கரையோர ரயில் மார்க்கங்களின் தலா 2 ரயில் சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், புத்தளம் ரயில் மார்க்கத்தின் 3 ரயில் சேவைகளும், வடக்கிற்கான ஒரு ரயில் சேவையும் இவ்வாறு ரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# பொரளை பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, பெப். 01

பொரளை பகுதியில் உயிரிழந்த நிலையில் ஆணொருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்தது.

பொரளை-லேக் வீதியில் இருந்தே குறித்த ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும், உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# இந்திய- வடமராட்சி கிழக்கு மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டவேளை முரண்பாடு

## இந்திய படகை நிறுத்த முற்பட்டவேளை

யாழ்ப்பாணம், பெப். 01

**காணாமற்போன மீனவர் படகை தாக்கியிருக்கலாமென்ற சந்தேகத்தில் எல்லை தாண்டிய இந்திய மீன்பிடிப் படகை மடக்கிப்பிடிக்க முற்பட்ட வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்குமிடையே கடலில் முரண்பாடு ஒன்று நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.**

கடந்த வியாழக்கிழமை கடலுக்கு சென்று திரும்பி வராததால் அவர்களை மூன்றாவது நாளாக தேடும் பணி நேற்றுமுன்தினமும் இடம்பெற்றது.

இந்தத் தேடுதல் பணியில் ஈடுபட்ட வத்திராயன் மீனவர்களின் படகுகள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இழுவைமடி படகை நிறுத்தி முற்பட்டவேளை முரண்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

எல்லை தாண்டிய இந்திய இழுவைமடி படகு தாக்கி காணாமல்போனவர்களது படகு மூழ்கடிக்கப் பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இருந்து வந்த நிலையிலேயே கடலில் இவ்வாறு இந்திய படகை நிறுத்த வத்திராயன் மீனவர்கள் முயற்சித்துள்ளனர். எனினும் இந்தியப் படகு தப் பிக் கொண்டது.

இதுவரை காணாமல்போன இரண்டு மீனவர்களது எந்தத் தகவலும் இன்மையால் மீனவர்கள் குடும்பங்கள் சோகத்தில் மூழ்கியுள்ளன. (அ)

# கொழும்புத்துறைமுகத்தில் டொலர் நெருக்கடியால் தேங்கி கிடக்கும் ஆபத்தான பொருட்களால் பாதிப்பு

கொழும்பு, பெப். 01

இலங்கையில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடியானது கொழும்புத்துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பல பொருட்களை விடுவிப்பதில் நீண்டகால தாமதத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், அவற்றில் ஆபத்தான சரக்குகள் என வகைப்படுத்தப்பட்ட பொருட்களும் அடங்குகின்றன.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அதிக எரியக் கூடிய திரவங்கள் கொழும்புத் துறைமுகத்தில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாபாரி ஒருவர் தெரிவிக்கையில்-

தனது பொருட்கள் கிட்டத்தட்ட எட்டு வாரங்களாகத் துறைமுகத்தில் தேங்கி கிடக்கின்றன.

உள்ளூர் பெயிண்ட் உற்பத்தியாளருக்காக பொருட்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டன. ஆனால் உள்ளூர் நிறுவனத்தால் டொலரைப் பெறமுடியாததால் அனுமதி வழங்கப்படவில்லை.

பொருட்கள் மிகவும் எரியக் கூடியவை மற்றும் தீவிர வெப்ப நிலையில் நீண்ட மணிநேரம் வைத்திருக்கக்கூடாது.

இந்த பொருட்கள் 24-48 மணி நேரத்தில் அகற்றப்பட வேண்டும். ஆனால் அவை கிட்டத்தட்ட எட்டு வாரங்களாக துறைமுகத்தில் சிக்கியுள்ளன.

இலங்கையில் அமெரிக்க டொலருக்கு தட்டுப்பாடு நிலவி வருவதால் அமெரிக்க டொலரை பயன்படுத்திப் பணம் செலுத்துவதற்கு மத்திய வங்கி கடுமையான வரம்புகளை விதித்துள்ளது.

மேலும் துறைமுகத்தில் உள்ள சில பொருட்களை அகற்ற நீண்ட காலதாமதம் ஆவதால் இதற்கு தாமதக் கட்டணம் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

கொழும்பில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடியானது எமது வர்த்தகத்திற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதுடன் இலங்கைக்கான ஏற்றுமதியாளர்களின் நம்பிக்கையையும் குலைக்கிறது-என்றார்.

டொலர் நெருக்கடி காரணமாக கொழும்புத் துறைமுகத்தில் பல சரக்குகள் தேங்கிக் கிடப்பதாக அகில இலங்கை பொது துறைமுக ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நிரோஷன் கோரகனகேயிடம் கேட்டபோது,

சப்ளையர்களால் கூறப்படும் பொருட்களில் ஆபத்தான பொருட்கள் உள்ளனவா என்பது தனக்குத் தெரியாது என்று கூறினார். (அ)

# புத்தளம் நாத்தாண்டியவில் மாணவி கொரோனா தொற்றால் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 01

புத்தளம்-நாத்தாண்டியவில் உள்ள தேசிய பாடசாலையொன்றின் மாணவி ஒருவர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் குறித்த பாடசாலையில் 6 ஆம் தரத்தில் கல்வி கற்றுவந்த மாணவியொருவரெனத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் இரண்டு நாட்கள் மாரவில வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 28ஆம் திகதி பாடசாலை முடிந்து வீடு திரும்பிய போது குறித்த மாணவிக்கு கடுமையான சுகவீனம் ஏற்பட்டிருந்ததன் காரணமாக அவர் மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தப்போவ பகுதியைச் சேர்ந்த 11 வயதான மாணவியொருவராவார். (அ)

# புலமைப்பரிசில் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் ஆரம்பம்

கொழும்பு, பெப். 01

புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி வரையில் இந்த பணிகள் இடம்பெறும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வழமையாக வருடத்தின் ஓகஸ்ட் மாதம் நடைபெறும் குறித்த 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை, கொரோனா வைரஸ் காரணமாக கடந்த வருடத்தில் பல முறை பிற்போடப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த பரீட்சை கடந்த ஜனவரி மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. (அ)

# யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் 5 கி.மீ. காப்பெற் வீதி அமைக்கும் பணி ஆரம்பம்

கிளிநொச்சி, பெப். 01

“சௌபாக்கியமான நோக்கு” கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக வீதி மற்றும் பெருந் தெருக்கள் , வீதி அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதிகள் அமைக்கும் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் யாழ்.பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தினுள் அடங்கும் சுமார் 5 கிலோ மீற்றர் வீதி அமைக்கும் பணி அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



சுமார் 250 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள 5.1 கிலோ மீற்றர் நீள வீதி அமைக்கும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி கே.பிரபாகரனின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் ஏந்திரி ரி.கே. இளங்கீரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பொறியியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி கலாநிதி அ.அற்புதராஜா, தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் திருமதி சிவமதி சிவச்சந்திரன், விவசாய பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ். வசந்தரூபா, யாழ். பல்கலைக் கழக வேலைகள் பொறியியலாளர் கே.கடம்பசீலன், நலச்சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி.ராஜ் உமேஸ்,பல்கலைக் கழக அதிகாரிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

வீதி அபிவிருத்திப் பணிகளைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்ததுடன், ஆரம்ப நிகழ்வை நினைவு கூரும் வகையில் அந்தப் பகுதியில் மர நடுகை நிகழ்வொன்றும் இடம்பெற்றது. (அ)

# 3 தடுப்பூசிகளையும் ஏற்றினால் கோவிட் ஆபத்து மிகக் குறைவு

கொழும்பு, பெப். 02

கோவிட் தடுப்புக்கான மூன்று தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட ஒருவர் தொற்றாளர் ஒருவருடன் நெருங்கிப் பழகியிருந்தால்கூட அவருக்கு கோவிட் தொற்று ஏற்படுவதற்கான ஆபத்து மிகக் குறைவு என்று சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குடும்ப வைத்திய நிபுணர் வைத்தியர் மல்காந்தி கல்ஹேன இதனை கூறினார்.

இதன்காரணமாக மூன்று தடுப்பூசியையும் செலுத்திக் கொண்ட நபர்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை எவ்வித இடையூறுகளும் இன்றி மேற்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்று முதல் நடமாடும் தடுப்பூசி நிலையங்கள் மூலம் பூஸ்டர் தடுப்பூசி போடப்படும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இருப்பினும், கோவிட் பூஸ்டர் தடுப்பூசியில் சிறிய சிக்கல்கள் இருந்தாலும், அது தீவிரமான நிலை இல்லை என்று வைத்தியர் அன்வர் ஹம்தானி கூறினார். (அ)

# அரசின் நாடகத்தை மக்கள் நம்பக்கூடாது

## சுனில் ஹந்துநெத்தி கூறுகிறார்

கொழும்பு, பெப். 01

**இரவில் சிந்தித்துவிட்டு காலையில் தீர்மானம் எடுக்கும் விதத்திலேயே இந்த அரசு செயல்பட்டுவருகின்றது. எனவே, அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் நாடகத்தை மக்கள் நம்பக்கூடாது. மாற்றத்துக்கு தயாராகவேண்டும் என்று ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.**

நுவரெலியா - நானுஓயா பெரக்கும்புர பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உரிய மாற்றுத் திட்டங்கள் எதுவுமின்றியே சேதனை பசளைமூலம் விவசாயம் செய்யும் முடிவு எடுக்கப்பட்டது. அதாவது உலகில் இயற்கை விவசாயம் செய்யும் முதல் நாடு இலங்கை, முதல் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ என்ற நாமத்தை வெல்வதற்காகவே அவசர அவசரமாக இந்த முடிவு எடுக்கப்பட்டது.

எவ்வித தூரநோக்கு சிந்தனையும் இன்றியே இந்த முடிவு எடுக்கப்பட்டது. வயலில் இறங்காதவர்களே திட்டத்தை



செயற்படுத்த ஆலோசனை வழங்கினர். இறுதியில் இன்று விவசாயம் சீரழிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் வீதிக்கு வந்துள்ளனர்.

நாட்டில் இன்று பல பிரச்னைகள் உள்ளன. ஆனால் மூன்று விடயங்களிலேயே அரசு தங்கியுள்ளது. ஒன்று எப்படியாவது எண்ணெய் இறக்குமதி செய்வது. இரண்டாவது கடன் பத்திரத்தை நிராகரித்து கொள்ளாமல் தக்கவைப்பது. மூன்றாவது கடன் செலுத்துவதற்கான தவணையை நீடித்துக்கொள்வது. இந்த மூன்றையும்தவிர நாடு பற்றியோ அல்லது மக்கள் பற்றியோ அரசுக்கு வேறு சிந்தனை இல்லை. எதையாவது விற்பனை செய்தாவது நாட்களை நகர்த்துவதுதான் திட்டமாக உள்ளது.

எனவே, இந்த நாட்டில் அரசியலை மாற்றாமல் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது. எனவே, மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் தயாராக வேண்டும்.

அதேவேளை, விவசாயத்துறை அமைச்சர் இன்று வயல்களுக்கு சென்று, நடிகர்களை தயார் செய்துவிட்டு நாடகம் அரங்கேற்றுகின்றார். சேதனை பசளைத் திட்டம் வெற்றியென பிரசாரம் செய்கின்றார்-என்றார். (அ)



# டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அண்மித்த பகுதியில் தீ!

கொழும்பு, பெப். 01

டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அண்மித்த காட்டுப்பகுதிக்கு இனம்தெரியாத விசமிகளால் தீ வைக்கப்பட்டதன் காரணமாக நீர்வீழ்ச்சியை அண்மித்த வனப் பகுதியில் சுமார் 30 ஏக்கர் தீயினால் எரிந்து நாசமாகியுள்ளன.

மலையக பகுதியில் வறட்சியான காலநிலையுடன் கடும் காற்றும் நிலவி வருகிறது. பற்றைக்காடுகள் கருகி போயுள்ளதனால் தீ மிகவேகமாக பரவி வருகிறது. இதனால் தீயைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவது கடினமாகவுள்ளன.

வறட்சியான காலநிலையை அடுத்து மலையக நீர்ப்பாசன பிரதேசங்களுக்கு சமீபமாக நீரேந்தும் பிரதேசங்களிலுள்ள காட்டுப் பகுதிகளுக்கு இனந்தெரியாத விசமிகள் தொடர்ச்சியாக தீ வைத்து வருவதால் பாரிய அளவில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களுக்கு தீ வைத்ததன் காரணமாக அப்பகுதியில் உள்ள நீர் ஊற்றுக்கள் அற்றுப்போவதுடன் சிறிய வகை உயிரினங்கள், எமது பிரதேசத்துக்கே உரித்தான அரிய வகை தாவரங்கள் பெறுமதி மிக்க மரக்கன்றுகள் ஆகியன அழிவடையும் நிலையை எதிர்நோக்கியுள்ளன.

வரட்சியான காலநிலையை அடுத்து பல பிரதேசங்களில் தற்போது குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்நிலையில் தொடர்ச்சியாக வனப்பகுதிகளுக்கு தீ வைப்பதனால் இந்நிலை மேலும் அதிகரித்து நீரின்றி பல்வேறு பிரச்னைகளுக்கு முகம் கொடுக்க நேரிடலாம் என பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, வனப்பகுதிகளை விசமிகளிடமிருந்து பாது காப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# அனுரகுமார மீது முட்டை வீசிய நபர்களுக்கு 5,000 ரூபாய் பணம்

கொழும்பு, பெப். 01

ஜே.வி.பி. கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவின் கார் மீது முட்டை தாக்குதல் நடத்திய நபர்களுக்கு 5000 ரூபாய் பணம் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தாக்குதல் தொடர்பில் கைதானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, கொழும்பில் உள்ள வர்த்தகர் ஒருவர் தமக்கு 5000 ரூபாவை கொடுத்து இந்த இடத்துக்கு அனுப்பி வைத்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இருவரையும் நிட்டம்புவ பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

உள்ளக தகவல்களின்படி கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சர் மற்றும் பலம் வாய்ந்த வர்த்தகர் ஒருவரால் இந்தக் குழுவுக்கு தலைமை தாங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மக்கள் மரவள்ளிக்கிழங்கு உண்ணவேண்டிய நிலை!

## ஹர்ஷ டி சில்வா எம்.பி.

கொழும்பு, பெப். 01

பொருளாதார ரீதியாக தற்போது இலங்கை கடைசி இடத்துக்கு சென்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் சோற்றுக்காக கையேந்தி வருவதாகவும், மீண்டும் நாம் அனைவரும் மரவள்ளிக்கிழங்கு உண்ணும் யுகத்துக்கு செல்ல வேண்டுமா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



நாடு என்ற வகையில் ஒரு வேளை உணவாவது இருக்க வேண்டும் எனவும் ஆனால் இலங்கையில் அதுவும் இல்லாமல் போயுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார். (அ)

# மகாபொல புலமைப்பரிசில் தொகையை அதிகரிக்குமாறு மாணவர்கள் கோரிக்கை

கொழும்பு, பெப். 01

ஐயாயிரம் ரூபா மகாபொல புலமைப்பரிசில் தொகை அதிகரிக்கப்படவேண்டும் என பல்கலைக்கழக மாணவர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போது, பல்கலைக்கழகங் களின் சிற்றுண்டிச்சாலைகளில் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதுடன், ஏனைய கல்வி செலவீனங்களும் உயர்ந்துள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டினர்.

இதனால் தமது கல்வி நடவடிக்கைகளை தொடருவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.

எனவே, அரசாங்கம் தமக்கு வழங்கப்படும் மகாபொல புலமைப்பரிசில் தொகையை அதிகரிக்கவேண்டும் என பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# செயலிழந்த லக் விஜய மின்பிறப்பாக்கி மீண்டும் தேசிய மின்சார கட்டமைப்பில்!

கொழும்பு, பெப். 01

நுரைச்சோலை லக் விஜய அனல் மின் நிலையத்தின் செயலிழந்த மின்பிறப்பாக்கி சீர் செய்யப்பட்டுள்ளதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் அன்று நவமணி தெரிவித்தார்.

900 மெகாவோட் உற்பத்தி செய்யும் குறித்த மின் உற்பத்தி நிலையத்தின் 300 மெகாவோட் மின்சாரத்தை வழங்கும் மின்பிறப்பாக்கி கடந்த டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி செயலி ழந்தது.

இந்நிலையில், குறித்த மின் பிறப்பாக்கி சீர்செய்யப்பட்டு தற்போது 160 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையில் தேவையான மின்சாரம் தொடர்பில் மதிப்பிடப்பட்டு வருவதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இந்த தேவையை தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்களினூடாக அல்லது தனியார் மின் உற்பத்தி நிலையங்களின் மூலம் பூர்த்தி செய்வது குறித்து இதன்போது தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# 74 ஆவது சுதந்திர தின நிகழ்வு; ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

கொழும்பு, பெப். 01

74ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வை சுதந்திர சதுக்க வளாகத்தில் மேற்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், அதற்காக உரிய வகையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

தேசிய சுதந்திர தின நிகழ்வின் அணிவகுப்பில் முப்படையினர் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவுகளின் சுமார் 6,500 உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# முட்டை வீச்சு பின்னணியில் அரசியல் தலையீடு உள்ளது

## தேசிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, பெப். 01

தேசிய மக்கள் சக்தியின் கூட்டம் மீது மேற்கொள்ளப்பட்ட முட்டைத் தாக்குதலை அரசியல் தலையீடுகளினால் மறைக்க முடியாது என மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக் காட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

மேலும் பிரசன்ன ரணதுங்க பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியதன் மூலம் தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பது தெளிவாகின்றது என அவர் கூறினார்.

இச்சம்பவத்தின் பின்னணியில் அரசியல் தலையீடு இருப்பதை மறைக்க முடியாது என்றும் இவற்றை மறைக்க முற்பட்டாலும் மக்கள் உண்மையை அறிந்துள்ளனர் என்றும் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

சட்டவிரோத நடவடிக்கை மூலம் தேசிய மக்கள் சக்தியின் பயணத்தை தடுக்க முடியாது என்றும் இவ்வாறான முயற்சிகள் பொதுமக்களிடையே மேலும் அதிருப்தியை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார். (அ)




# கனிய மண் அகழ்வை எதிர்த்து மன்னாரில் நேற்று கவனயீர்ப்பு!

## வீதியில் இறங்கி மக்கள் போராட்டம்

**மன்னார், பெப். 01**

**மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மண் அகழ்வு உள்ளடங்களாக பல்வேறு நடவடிக்கைகளுக்கு எதிராக நேற்று திங்கட்கிழமை காலை மன்னாரில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் இடம்பெற்றது.

மன்னார் பஜார் பகுதியில் அமைந்துள்ள மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் சிலைக்கு முன்பாக குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகி மன்னார் மாவட்ட செயலகப் பகுதியை வந்தடைந்தது.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மாவட்ட செயலகத்துக்கு முன் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மண் அகழ்வுக்கு எதிராகவும், குறித்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தக் கோரியும் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பகுதியில் அமைக்கப்பட்ட உயர் மின்வலு காற்றாடிகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், தற்போது அமைக்கப்பட்டு வரும் வீதிகள் தரமற்றதாகக் காணப்படுகின்றமை குறித்தும், போதைப்பொருள் கடத்தலின் தளமாக மன்னாரை மாற்றி மன்னார் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மக்களுக்கு குறித்த நடவடிக்கைகளின் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் மத தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், நகர சபை, பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பெண்கள் அமைப்புப் பிரதிநிதிகள் , சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் பின் மன்னார் பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை வழங்கினர்.

மகஜரை பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் இவ்விடயம் தொடர்பில் உரிய உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு செல்வதாக தெரிவித்தார். (அ)




# மிகச்சிறப்பாக நடந்து முடிந்தது பசுமை அமைதி விருதுகள் விழா

யாழ்ப்பாணம், பெப். 01

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகள் வழங்கும் விழா நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மிகச்சிறப்பாக நிகழ்ந்தேறியது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவுனியாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த. மங்களேஸ்வரன் பங்கேற்றிருந்தார். சிறப்பு விருந்தினர்களாக வட பிராந்திய விவசாய ஆராய்ச்சிப் பிரிவின் மேலதிக பணிப்பாளர் கலாநிதி எஸ். ஜே. அரசகேசரி, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் ஏ. எம். றியாஸ் அகமட் ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கடந்த ஆண்டு தேசிய ரீதியில் மாணவர்களிடையே இணைய வழியில் சூழல் பொது அறிவுப் பரீட்சையொன்றை நடாத்தியிருந்தது. இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் பங்கேற்றிருந்த இப்பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற முதல் மூன்று மாணவர்களும் இந்நிகழ்ச்சியில் பசுமை அமைதி விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களோடு விசேட சித்தி மற்றும் அதிதிறமைச் சித்தி பெற்ற மாணவர்களில் ஒரு தொகுதியினர் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் சிவகரன் அபிசாய்ராம் முதலாம் இடத்தினைப் பெற்று தங்கப் பதக்கத்தினையும், யாழ் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஷண்முஹி கருணாநிதி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தினையும், மட்டக்களப்பு புனித ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த செல்வி டிலுக்சினி டன்ஸ்ரன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கங்களையும் சுவீகரித்துக் கொண்டார்கள். இவ்விருதுகள் சூழலியல் ஆசான் க.சி. குகதாசன் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டுக்கான சிறந்த சூழல்நேயச் செயல்பாட்டாளருக்கான பசுமை அமைதி விருதை இயற்கை விவசாயி அல்லைப்பிட்டி மகேஸ்வரநாதன் கிரிசன் பெற்றுக்கொண்டார். தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்ட இவ்விருதோடு, ஒரு இலட்சம் ரூபா பொற்கிழி வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

வரவேற்புரையை தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சூழல்பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த. யுகேஸ் ஆற்ற, நன்றியுரையை பொதுச் செயலாளர் ம. கஜேந்திரன் நிகழ்த்தியிருந்தார். (அ)

### கேரதீவில் மிதிவெடி மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 01

சாவகச்சேரி-கேரதீவுப் பகுதியில் உள்ள அரச காணியில் இருந்து நேற்றுக் காலை மண்ணில் புதையுண்ட நிலையில் மிதிவெடி ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கையின் போது குறித்த மிதிவெடி இனங்காணப்பட்ட நிலையில், அது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

### அனுமதியின்றி ட்ரோன் கமரா இயக்கிய ரஷ்யர் கைதானார்!

கொழும்பு, பெப். 01

மிரிஸ்ஸ கடற்கரை பகுதியில் அனுமதியின்றி ட்ரோன் கமெராவை இயக்கிய குற்றச் சாட்டுக்காக ரஷ்ய பிரஜை யொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மிரிஸ்ஸ கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப் பட்டு பின்னர் வெலிகம பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், விடுமுறைக்காக இலங்கைக்கு வந்திருந்த ரஷ்ய புகைப்படக் கலைஞர் என்பதுடன் மிரிஸ்ஸ பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)



# மஹாநாயக்கர்களை சந்தித்து ஆசி பெற்றார் காமினி செனரத்

கொழும்பு, பெப். 01

ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்ட காமினி செனரத் மல்வத்து அஸ்கிரி மஹாநாயக்க தேரரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

முதலில் மல்வத்து மஹா விகாரை பீடத்தின் மஹாநாயக்கர் வணக்கத்திற்குரிய திப்படுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்ட ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், அதனை தொடர்ந்து அஸ்கிரிய மஹா விகாரைக்கு சென்று அஸ்கிரிய மஹா விகாரை பீடத்தின் மஹாநாயக்கர் வரகாகொட தம்மசித்தி ஸ்ரீ பஞ்ஞானந்த ஞானரதனாபிதான தேரரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையை யதார்த்தமாக்குவதற்கு ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்துக்கு பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டிய மல்வத்து, அஸ்கிரிய மஹாநாயக்கர்கள் நாட்டின் தற்போதைய நிலையை அறிந்து மக்களுக்கு சேவையாற்றுவதற்கு ஆசீர்வதிப்பதாக கூறினர். (அ)

■ பனங்காட்டான்



# ஒன்றுமே இல்லாத மாகாண சபைக்கு சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் போட்டி!

மூன்று நிர்வாக அலகுகளாகவிருந்த இலங்கை இராச்சியத்தை ஒற்றை அலகாக்கிய பிரித்தானிய சாம்ராஜ்யம், அதற்குச் சுதந்திரம் என்று பெயர் சூட்டி கைவிட்டுப்போன காலம், பெப்ரவரி 4ஆம் திகதி எழுபத்தைந்தாவது வருடத்தில் பாதம் பதிக்கிறது.

சனத்தொகை எண்ணிக்கைக் கணக்கால் தங்களை பெரும்பான்மையினராக அடையாளப்படுத்தியுள்ள சிங்கள தேசியவாதிகள், மேட்டுக்குடி மேலாண்மை வாதத்துடன் மற்றைய சகல இனங்களையும் சிறுபான்மையினராக நாமம் சூட்டி தங்களை ஆள்பவர்களாகவும், மற்றையோரை ஆளப்படுபவர் களாகவும் வகைப்படுத்தி எதேச்சார ஆட்சி நடத்துகிறது.

இதனால் இலங்கை (சிலோன்) என்பது 24 ஆண்டுகளின் பின்னர் - 1972ல் சிறிலங்கா எனப் பெயர் சூட்டப்பட்டு சோசலிச குடியரசு என்று மாறியது. இது வழிமுறையாக இப்போது சிங்கள பௌத்த தேசமாகியுள்ளது.

74 ஆண்டுகளாக தங்கள் பிறப்புரிமைக்காக போராடி வருபவர்களான ஈழத்தமிழினம் தன்னைத் தானே வருத்திக்கொண்டு, தங்களுக்குள் பிளவுபட்டு, ஒருவரையொருவர் வசை பாடுபவர்களாகவும், தலைமை நிலைக்காக தங்களுக்குள் போராடுபவர்களாகவும் மாறியுள்ளனர்.

சகல இனங்களும் இணைந்த இலங்கைத் தேசியத்துக்காக குரல் கொடுத்து வந்த சேர். பொன். அருணாசலமே, தமிழரை சிங்களவர் ஏமாற்றுகின்றனர் என்று முதன்முதலாக கண்டறிந்த தமிழ்த் தலைவர். இவரே தமிழருக்கு தனியான ஆட்சி நிலப்பரப்புக் கேட்ட முதற்தமிழரும்.

1948க்குப் பின்னர் உருவான முதலாவது தமிழ் அரசியற் கட்சியான தமிழ் காங்கிரசின் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டார். இக்கட்சியிலிருந்து பிரிந்து சென்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலானவர்கள் தமிழரசுக் கட்சியை (இதனையே சமஷ்டி என்றும் அழைத்தனர்) உருவாக்கி, பல சாத்வீகப் போராட்டங்களை நடத்தினர்.



ஜி.ஜி.பொன்னம்பலம் ஒருகாலத்தில் ஏற்றுக்கொண்ட அமைச்சர் பதவியை குறை கூறிய தமிழரசுக் கட்சி, டட்லி சேனநாயக்கவின் தேசிய அரசில் தங்கள் பிரதிநிதியாக மு. திருச்செல்வத்தை அமைச்சராக்கியது. என்ன நடந்தது? தமிழர்களை அடையாளம் காணவென சிங்கள அரசால் திட்டமிட்டு கொண்டு வரப்பட்ட அடையாள அட்டையை ஏற்று வாக்களித்ததுதான் இப்பதவி பெற்றுக் கொடுத்த சாதனை.

பிரிந்தவர்கள் மீண்டும் இணைந்து தமிழர் கூட்டணியை உருவாக்கி, தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து அதிகூடிய ஆசனங்களைக் கைப்பற்றியது அடுத்த கட்டம். 1977 பொதுத் தேர்தல் அமோக வெற்றியால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்தது. அதனால் தனிநாடு என்பது வசதி கருதி மறக்கப்பட்டு கடைநிலை அதிகாரம்கூட இல்லாத மாவட்ட சபையே கிடைத்தது.

தங்கள் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட தமிழ் மாணவர்களும் இளையோரும் உரிமைப் போரை தங்கள் கைகளில் எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். போர் என்றால் போர் என்று பிரகடனம் செய்த தர்மிஸ்டர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் போர் வெறியை சந்திக்கும் தலைவிதி இளைய சமூகத்திடம் சென்றது.

முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் உறைநிலையை அடைந்து ஆண்டுகள் பதின்மூன்று ஆயிற்று. 1987ல் இலங்கை அரசியலமைப்பில் இந்தியா திணித்த பதின்மூன்றாவது திருத்தமே 34 ஆண்டுகளைக் கடந்தும் பேசுபொருளாக உள்ளது.

கற்பிற் சிறந்தவள் கண்ணகியா? மாதவியா? என்று பட்டிமன்றம் நடத்திய தமிழ்ச் சமூகம், இப்போது பதின்மூன்றாவது திருத்தம் நல்லதா? கெட்டதா? என்று பட்டிமன்றம் நடத்துகிறது.

1988 நவம்பர் 19ல், பதின்மூன்றாம் திருத்தத்தின் அடிப்படையில் தற்காலிகமாக உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபை நிர்வாகம், 1990 மார்ச் மாதத்துடன் உயிர் நீத்தது. 2006 அக்டோபர் 16ம் திகதி உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டன. 2008 மே மாதம் 10ம் திகதி, பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டபோது அப்போது இலங்கையை ஆட்சி புரிந்த மகிந்த ராஜபக்வின் மக்கள் ஐக்கிய முன்னணி நிர்வாகத்தைக் கைப்பற்றியது.

இருபத்தைந்து ஆண்டுகளாக ஆளுனர் ஆட்சியிலிருந்த வடமாகாண சபைக்கான முதலாவது தேர்தல் 2013 செப்டம்பர் 21ம் திகதி இடம்பெற்றது. 38 ஆசனங்களில் 30ஐ தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றியதால் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதலாவது முதலமைச்சர் ஆனார். 2018ல் இச்சபையின் ஆயுட்காலம் முடிந்த பின்னர் இதுவரை தேர்தல் நடைபெறவில்லை. மீண்டும் ஆளுனர் ஆட்சியே தொடர்கிறது.

1977இல் தமிழர் தனிநாடு கேட்டுக் கிடைத்த மாவட்ட சபைக்கும், தமிழீழத்துக்குப் போராடிய ஈழவர் கோரிக்கையை மடக்க வழங்கப்பட்ட மாகாண சபைக்கும் சிங்கள அரசு வழங்கிய அதிகாரப் பரவல் தொடர்பான ஒற்றுமையை பின்வரும் கூற்றுகளின் ஊடாகப் பார்க்கலாம்.

1981இல் யாழ்ப்பாண மாவட்ட சபையின் முதலாவது தலைவராக (இவரே இறுதித் தலைவரும்) பதவியேற்ற தமிழரசுக் கட்சியின் முன்னாள் செனட்டரான சு.நடராஜா (பொட்டர் என பிரபலமானவர்) 1983இல் இப்பதவியை ராஜினாமா செய்தார். ஒரு மேசையும் கதிரையும் வாங்குவதற்குக்கூட அதிகாரம் இல்லாத தலைவர் பதவி என்று கூறிவிட்டே இவர் பதவி துறந்தார்.

2003இல் வடமாகாண சபையின் தலைவராகப் பதவியேற்ற சி.வி.விக்னேஸ்வரன், மாகாண சபைக்கான சகல அதிகாரங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவேன் என்று கூறினாராயினும், தாம் இருக்கும் கதிரைக்கு ஒரு கால் இல்லை (மூன்று கால் உள்ள ஆடும் கதிரை), இதிலிருந்து நான் என்ன செய்ய முடியுமென்று சொல்லி அதிகாரம் இல்லாத தலைவர் பதவி என்பதைப் பறைசாற்றினார்.

கடந்த 74 ஆண்டுகளாக தமிழினத்துக்கு சிங்கள ஆட்சி பீடங்கள் வழங்கிய அதிகூடிய அதிகாரப் பரவலாக்கல் எவ்வளவானது என்பதை அறிய மேற்குறிப்பிட்ட இரண்டு சபைகளின் தலைவர்களது கூற்று போதுமானது.

இந்தப் பின்னணியில் நின்றே இப்போதைய ஆடுகளமான 13வது அரசியல் திருத்தம், மாகாண சபை நிர்வாகம், வடக்கும் கிழக்கும் இணைய வேண்டுமென்ற விருப்பம், தமிழரைத் தொடர்ந்து ஒற்றையாட்சிக்குள் வைத்திருக்கவே இது உதவும் என்றவாறான கோசங்களையும்......

13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்த ஆறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்ட கடிதம் இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டு பத்து நாட்கள் ஆகிவிட்டது. ஆனால், இதையொட்டிய விடயங்கள் காற்றில் மேலெழுந்து பறக்கின்றன.

அரசியல் தீர்வு மட்டும் தமிழ் மக்கள் பிரச்னைகள் அல்ல, இப்போது அரசியல் தீர்வு அவசரமல்ல என்று பகிரங்கமாகக் கூறியுள்ளார் நிதியமைச்சர் பஸில். வடக்கு கிழக்கு மக்கள் அரசியல் அமைப்பில் நாட்டம் காட்டவில்லை. அபிவிருத்தியும் வாழ்வாதாரம் மட்டுமே அவர்களின் தேவைகளாக காணப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார் இந்தியாவிலுள்ள இலங்கையின் தூதுவர் மிலிந்த மொறகொட.

முதலாமவர் அமெரிக்கப் பிரஜாவுரிமையையும் கொண்ட இரட்டைப் பிரஜாவுரிமைக்காரர். இரண்டாமவர், அமெரிக்காவின் மருமகன் முறையான வல்லரசின் விசுவாசி. இவர்கள் இருவரதும் குரல் எங்கிருந்து வருகிறது என்பதை புரிந்து கொள்ள நேரம் எடுக்காது.

மறுபுறத்தில், கோட்டாபய கொண்டுவர உத்தேசித்துள்ள புதிய அரசியல் அமைப்பில் பதின்மூன்றாவது திருத்தமும் மாகாண சபை முறைமையும் காணாமற் போய்விடும். ஒரு நாடு ஒரு சட்டம் என்பதே (சிங்கள நாடு, சிங்களச் சட்டம்) புதிய அரசியல் அமைப்பின் கருப்பொருள். இதனூடாக ஆறு தமிழ்க் கட்சிகளின் இந்தியாவுக்கான கடிதம் அம்போ ஆகிவிடும். இதனையே கோட்டாபயவிடம் சிங்கள பௌத்தர்கள் எதிர்பார்க்கின்றனர். இதனை இலகுவாக கோதபாய நிறைவேற்ற, தமிழ்த் தலைவர்களின் இந்தியாவுக்கான கடிதம் உதவப் போகிறது என்ற கருத்து அரசியல் அரங்கில் வலுப்பெற்று வருகிறது.

இதற்கும் அப்பால், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான மக்கள் முன்னணியும் தமிழ்க் காங்கிரசும் பதின்மூன்று எதிர்ப்பு நடவடிக்கை நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இவர்களுக்கு புதிய பரிமாணத்தை வரவாக்கியிருக்கிறது. தமிழர் தாயகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இவர்களின் முன்முயற்சி சற்று வித்தியாசமாகப் பார்க்கப்படுகிறது.

மாகாண சபை முறைமையை ஏற்கவில்லை - ஆனால் அடுத்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவோம் என்று அறிவித்திருப்பது அரசியலில் ஒரு வகையான எறிகுண்டு. மாகாண சபையில் எதுவும் இல்லையென்பதை ஆறு தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கும் காட்டவே தேர்தலில் போட்டியிடப் போவதாக கஜேந்திரகுமார் கூறினாலும் உண்மை அதுவல்ல. இனி வரப்போகும் பொதுத்தேர்தலில் தமது அணிக்கு கூடிய ஆசனங்களைப் பெற வேண்டுமானால், மாகாண சபையில் கூட்டமைப்புக்குக் கிடைக்கும் ஆசனங்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்கின்ற கணக்கு இப்பொழுது இவருக்குத் தெரிய வந்துள்ளது.

மாகாண சபையை காணாமலாக்க கோட்டாபய அரசு திட்டமிட்டுள்ளது. காணாமற்போகவுள்ள மாகாண சபையூடாக கூட்டமைப்பை குலைக்க கஜேந்திரகுமார் திட்டமிடுகிறார். அதே மாகாணசபை முறைமையூடாக கஜேந்திரகுமார் தரப்பை அம்பலப்படுத்தும் முயற்சியில் ரெலோ அணியினர் ஈடுபட்டுள்ளனர்.

ஜி.ஜியும், எஸ்.ஜே.வியும் எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் சுட்ட மண்ணும் சுடாத மண்ணுமாக அரசியல் செய்த அந்தக் காலம் வேறு. முட்டாள்கள் என்று முன்னைய தமிழ்த் தலைமைகளால் நாமம் சூட்டப்பட்ட சிங்களவர், ஒன்றுபட்டு தமிழர்களுக்கு அரசியல் கற்பிக்கும் இன்றைய காலம் வேறு. கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் உணர்ந்து வளர்காலத்தை தமிழ்த் தலைமைகள் எவ்வாறு வழிநடத்தப் போகின்றன? கிழிச்சது போதும் - போங்கள்; என தமிழ் மக்கள் இவர்களுக்குப் பாடம் புகட்டக்கூடிய ஒரு காலம் வருமா?

■

# தமிழ்நாடு அரசு – ஆளுநர் ரவி முரண்பாடு தீவிரமடைகிறதா?

■ முரளிதரன் காசி விஸ்வநாதன்



தி.மு.கவின் அதிகாரபூர்வ நாளிதழான முரசொலியில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியைக் கண்டித்து நீண்ட கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது. ஆளுநரின் குடியரசு தின வாழ்த்துச் செய்தியில் இடம்பெற்றிருந்த கருத்துகளை தி.மு.க. ஏற்கனவே கண்டித்திருந்த நிலையில், மேலும் ஒரு கட்டுரை வெளியாகியிருக்கிறது.

முரசொலியின் கடைசிப் பக்கத்தில் ""கொக்கென்று நினைத்தாரோ தமிழக ஆளுநர் ரவி"" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது. அந்தக் கட்டுரையில் ஆளுநரின் குடியரசு தின வாழ்த்துச் செய்தியை மையமாக வைத்து கடுமையான கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

"அவர் ஒரு காவல்துறை அதிகாரியாக இருந்து, ஓய்வுக்குப் பின்னர் ஆளுனராக அமர்த்தப்பட்டவர். மிரட்டல் உருட்டல் பாணிகள் காவல் துறைக்குத் தேவை. பல நேரங்களில் அந்த பாணி கைகொடுக்கும். ஆனால், அது அரசியலில் எடுபடாது என்பதை அவர் உணர்ந்திட வேண்டும்.

குடியரசு தின விழாவை ஒட்டி ஆளுநர் விடுத்துள்ள செய்தி, அவர் தனது பொறுப்புணராது தமிழக மக்களின் தன்மானத்தை உரசிப் பார்க்க நினைப்பதாகத் தோன்றுகிறது. நீட்டுக்கு எதிராக தமிழக சட்டமன்றம் ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேற்றி அதனை ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி மாதங்கள் சில கடந்தும் அது கிடப்பிலே கிடக்கிறது.

அதன் நிலை என்னவென்று தெரியாத நிலையில், நீட் வருவதற்கு முன்பு இருந்த நிலையைவிட நீட் வந்த பிறகு அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவப் படிப்பு சேர்க்கை அதிகரித்துள்ளது என்று கூறியிருக்கிறார்.

ஒட்டுமொத்தத் தமிழக முமே நீட்டை எதிர்த்து நிற்கும் நிலையில், தமிழகத்தின் சட்டப்பேரவையே அதனை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில், அது அவரது பரிசீலனையில் இருக்கும் நிலையில், ஒரு ஆளுநர் இப்படி அறிவிப்பது என்ன நியாயம்?

ஒரு கட்சி தனது கொள்கைகளைச் சொல்லி மக்களிடம் வாக்குப் பெற்று ஆட்சி பீடம் ஏறுகிறது. மக்களும் அந்தக் கட்சி அவர்களது எண்ணைத்தை நிறைவேற்றும் என்று எண்ணி வாக்களிக்கிறார்கள். அந்த மக்களின் எதிர்பார்ப்பை தீர்மானமாக்கி அனுப்பும்போது அதை ஓர் ஆளுநர் அலட்சியப்படுத்துவது என்பது சுமார் ஏழு கோடி மக்களை அவமதிப்பது என்பதை உணர வேண்டும்.

தமிழக அரசியல்வாதிகள் பல கருத்துகளில் ஒன்றுபடுவதில்லை. பல ஜீவாதார உரிமைகளில் அவர்கள் ஒன்றுபட்டு நிற்பார்கள். அங்கே கட்சி வேறுபாடுகளைக் காண முடியாது. அப்படிப்பட்ட உரிமைகளில் ஒன்றுதான் நீட் வேண்டாம் என்பது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இருமொழிக் கொள்கைதான். இதில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் மாறுபட்ட கொள்கையில்லை. மற்றொன்று நீட் வேண்டாமென்பது.

ஆளுநர் ரவி இதனை உணர்ந்து உரிய தகவலை மேலிடத்திற்குத் தெரிவித்து ஒட்டுமொத்தத் தமிழகத்தின் உரிமைக் குரலுக்கு அங்கீகாரம் வாங்கித்தர முயல வேண்டும். அதனை விடுத்து இங்கே பெரியண்ணண் மனப்பான்மையோடு அரசியல் செய்ய நினைத்தால் "கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா" எனும் பழங்கதை மொழியை அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம். அதாவது இது நாகாலாந்து அல்ல, தமிழகம் என்பதை அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம்" என்று அந்தக் கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே, குடியரசு தின வாழ்த்துச் செய்தியில் ஆளுநர் ஆர்.என். ரவி தெரிவித்த கருத்துகளுக்கு தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கடுமையான அறிக்கை ஒன்றின் மூலம் பதில் அளித்திருந்தார்.

"தமிழ்நாட்டில் மும்மொழி கொள்கையினை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்திட முன்வர வேண்டும் என்ற கருத்து உருவாகும் வகையில்

> **தமிழ்நாட்டின் ஆளுநராக முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரியான ஆர்.என். ரவி நியமிக்கப்பட்டபோதே, அவரது நியமனம் குறித்து சமூக வலைதளங்களில் விவாதங்கள் எழுந்தன. இந்த நிலையில் நீட் தேர்வு தொடர்பான மசோதாவை மத்திய அரசுக்கு ஆளுநர் அனுப்பிவைக்காதது தொடர்ந்து நெருடலாகவே இருந்தவந்தது.**

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், பிற மாநிலங்களில் உள்ள மாணவர்களைப் போல நம்முடைய தமிழ்நாட்டுப் பள்ளி மாணவர்களும் பிற இந்திய மொழிகளைப் பயில வேண்டும் எனவும் பிற இந்திய மொழிகளின் அறிவை நம்முடைய மாணவர்களுக்கு மறுப்பது என்பது சரியல்ல எனவும் தனது குடியரசு நாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்து அது ஊடகங்களிலும் பரவலாக வெளிவந்திருக்கின்றது.

தமிழ் நாட்டின் மொழிப்போராட்ட வரலாறை அறிந்தோருக்குப் பிற இந்திய மொழிகள் என்பது இந்தியை முன்னிலைப்படுத்தும் சொற்பிரயோகம் என்பதில் இரு வேறு கருத்து இருக்க முடியாது.

இரு மொழிக் கொள்கையால் தமிழ் நாட்டு மாணவர்களின் கல்வித் தகுதியிலோ அல்லது பெரும் பொறுப்புகளில் அவர்களில் இடம் பெறும் வகையில் பெறும் வாய்ப்புகளிலோ யாதொரு பின்னடைவோ குறைகளோ ஏதுமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றத்திலும் நீட் தேர்வில் இருந்து விலக்களிக்கும் சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பட்டு அது மாண்புமிகு ஆளுநரின் ஒப்புதலுக்குக் காத்திருக்கின்றது.

ஆளுநர் அவர்கள் அந்த சட்ட முன் வடிவிற்குத் தன்னுடைய இசைவினையும் விரைவில் அளித்து ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் தமிழ்நாட்டு மாணவச் செல்வங்களின் மருத்துவப் படிப்பு கனவுகளை நிறைவேற்றத் துணை நிற்பார் என நான் நம்புகின்றேன்" என்று அந்த அறிக்கையில் கூறியிருந்தார்.

தமிழ்நாட்டின் ஆளுநராக முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரியான ஆர்.என். ரவி நியமிக்கப்பட்டபோதே, அவரது நியமனம் குறித்து சமூக வலைதளங்களில் விவாதங்கள் எழுந்தன. இந்த நிலையில் நீட் தேர்வு தொடர்பான மசோதாவை மத்திய அரசுக்கு ஆளுநர் அனுப்பிவைக்காதது தொடர்ந்து நெருடலாகவே இருந்தவந்தது.

சில நாட்களுக்கு முன்பாக புதுடில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவைச் சந்திக்க தமிழ்நாடு எம்.பிக்களுக்கு நேரம் வழங்கப்படாத நிலையில், செய்தியாளர்களைச் சந்தித்த டி.ஆர். பாலு, ஆளுநர் குறித்து கடுமையான கருத்துகளைத் தெரிவித்தார். "ஆளுநர் ஆர்.என். ரவி பதவி விலக வேண்டும்" என்று கூறினார்.

இதற்கு அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்கும் ஆளுநரின் அதிகாரத்தை மாநில அரசுக்கு மாற்றும் வகையில் அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் புதிய சட்டத் திருத்தம் கொண்டுவரப் போவதாக தமிழ்நாடு அரசு அறிவித்தது.

இந்த நிலையில்தான், தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கையை கேள்விக்குட்படுத்தும் வகையில் அறிக்கை வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிட்டார் ஆளுநர் ஆர்.என். ரவி.

ஆளுநரின் வாழ்த்துச் செய்தியில் இருந்த கருத்துகளும் ஆளும் தி.மு.கவின் சார்பில் அடுத்தடுத்து வெளிவரும் அறிக்கைகளும் ஆளும் தரப்பிற்கும் ஆளுநருக்கும் இடையில் நிலவும் தீவிர மோதல் ஏற்பட்டிருப்பதையே உணர்த்துகின்றன. ■

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

27. A = 1, B = 5, C = 3, D = 6 எனின்,

A + B = ..........................

1) D 2) B 3) C


28.




இரண்டு எண்சட்ட எண்களினையும் கூட்டினால் கிடைக்கும் எண்?

1) 30 2) 20 3) 40

29.



இவ் உருவில் உள்ள முக்கோணிகள் எத்தனை?

1) 12

2) 8

3) 15

30. 10 நண்பர்கள் பண்டிகை ஒன்றின் போது தமக்குள் கை கொடுத்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்கள் எனின் இவர்களுக்குள் கை கொடுக்கப்பட்ட சந்தர்பங்கள் எத்தனை?

1) 90 2) 45 3) 100


31. கூடை ஒன்றில் 3 சிவப்பு நிறக் குடைகளும் 5 நீல நிறக் குடைகளும் 6 வெள்ளை நிறக் குடைகளும் இருந்தன. இக் குடைகளினைப் பார்க்காது எழுமாறாக ஒவ்வொன்றாக எடுக்கும் போது நிச்சயமாக சிவப்பு நிறக் குடை வருவதற்கான வாய்ப்புக்கள் எத்தனையாவது தடவையாக இருக்கும்.

1) 3 2) 12 3) 11


33. ஒருவர் ஓர் இடத்தில் நின்று வடக்குத்திசை நோக்கி 100m நடந்து அதில் இருந்து கிழக்கு திசை நோக்கி 100m நடந்து அவ்விடத்தில் நின்று முன்னர் புறப்பட்ட ஆரம்ப இடத்தை பார்த்தார் எனின் இவர் பார்த்த திசை யாது?

1) வடமேற்கு 2) தென்மேற்கு 3) வடகிழக்கு


34.



மேலே காட்டப்பட்டவாறு காகிதத் தாள் ஒன்றை மடித்து துளையிடப்பட்டது. பின்னர் விரிக்கும் போது அதன் துளையிடப்பட்ட கோலம் எவ்வாறு காணப்படும்.




35. காகிதத் தாள்களினைக் கொண்டு பூக்கள் செய்து பூச்சாடியில் வைக்கப்பட்டுள்ள தொடர் ஒழுங்கினை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.




## விடைகள்

| | | |
|---|---|---|
| 27. 1 | 30. 2 | 33. 2 |
| 28. 1 | 31. 2 | 34. 2 |
| 29. 1 | 32. 3 | 35. 3 |

## கல்வி tv CHANNEL-1

**01.02.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

## கல்வி tv CHANNEL - 2

**01.02.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |




# நாவிதன்வெளியில் பொங்கல் மூவின மாணவரும் பங்கேற்பு!

நாவிதன்வெளி, பெப். 01

நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) வருடாந்த தைப் பொங்கல் தினவிழா மூவின மாணவர்கள், ஆசிரியர்களின் பங்கேற்றலுடன் சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் சீ. பாலசிங்கனின் தலைமையில் மேற்படிவிழா பாடசாலை மண்டபத்தில் சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

பிரதிஅதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரனின் வழிகாட்டலில், உதவிஅதிபர் ந.கோடீஸ்வரன் நெறிப்படுத்தலில் பொங்கல்விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து கொண்டு பொங்கலின் வர லாறு மகிமை பற்றி சிறப்புரை யாற்றினார்.

முன்னதாக, பொங்கல் இடம்பெற்று சமய ஆராதனை இடம்பெற்றது. அத்துடன் கலாசார பாரம்பரியத்திற்கமைவாக ஏனைய பட்சணங்களும் தயார் படுத்தப்பட்டிருந்தன.

விழாவில் பங்கேற்ற இஸ்லாமிய, கிறிஸ்தவ ஆசிரியர்கள் மற்றும் மூவின மாணவர்களும் பாரம்பரிய பொங்கலை உணவை விரும்பி பரிமாறிக் கொண்டனர். (ஐ)

# யானைக்கு வைத்த மின்வேலி விவசாயி உயிருக்கு எமனானது

கொக்கட்டிச்சோலை, பெப். 01

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கச்சக்கொடி சுவாமி மலை பிரதேசத்தில் யானைக்கு வைத்த மின்சார வேலியில் சிக்குண்டு விவசாயி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொக்கட்டிச்சோலை கச்சக்கொடியை சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபர் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தனக்கு சொந்தமான காணியை பராமரிக்கும் பொருட்டு அங்கு பயிரிடப்பட்ட பயிர்களை பாதுகாப்பதற்காக தனது காணியைச் சுற்றி யானைகள் உட்பிரவேசிக்காமல் சட்ட விரோதமான முறையில் மின்சார வேலிகளை அமைத்துள்ளார்.

தனது பயிர்ச் செய்கையை பாதுகாக்கவே அவர் இவ்வாறு மின்சார வேலி அமைத்திருந்தார் என்று கூறப்படுகின்றது. இந்நிலையில் பயிர் காவலுக்கு சென்றவரை காணாத நிலையில் அவரின் மனைவி தேடிச் சென்ற நிலையில் மின்சாரத்தால் தாக்குண்டு உயிரிழந்து காணப்பட்டார் என்று அறியருகின்றது.

மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அக்கரைப்பற்று மாநகரில் சோலைவரி அறவீடு ஆரம்பம்!

அக்கரைப்பற்று, பெப். 01

அக்கரைப்பற்று மாநாகர சபையின் ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் குடியிருப்பாளர்களிடமிருந்து சோலைவரியை அறவீடு செய்யும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக மாநகர ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபி, நேற்றுத் தெரிவித்தார்.

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க உள்ளூராட்சி கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக, அக்கரைப்பற்று மாநகர சபை அதன் ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் குடியிருப்பாளர்களால் செலுத்தப்பட வேண்டிய சோலைவரியை செலுத்துமாறு, ஒவ்வொரு குடியிருப்பாளர்களுக்கும் தனித்தாக கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாநகர சபைக்குச் செலுத்த வேண்டிய சோலை வரி நிலுவைத் தொகை முழுவதையும் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்துமாறு, குடியிருப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும், செலுத்தப்படாதுள்ள சோலைவரி நிலுவை தொகை முழுவதையும் குறித்த காலப்பகுதிக்குள் செலுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கடவுள் காப்பாற்றுவார் சிந்தனையை விட்டுவிட்டு தடுப்பூசியை பெறுங்கள்!

## சந்திரகாந்தன் எம். பி.

**மட்டக்களப்பு, பெப். 01**

**மதம் சார்ந்து, கடவுள் காப்பாற்றுவார் என்ற சிந்தனைகளை விட்டெறிந்து தடுப்பூசியை அனைவரும் பெற வேண்டும் என்று சி.சந்திகாந்தன் (பிள்ளையான்) எம். பி. அறிவுறுத்தியுள்ளார்.**

பூஸ்டர் டோஸ் எனப்படும் கொரோனா தொற்றுக்கான மூன்றாவது தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்து நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அனைவரும் கவனவீனமாக செயல்படாமல் 3ஆவது தடுப்பூசியை பெற வேண்டும். இல்லாவிடில் நாடு பொருளாதார பிரச்னையை எதிர்நோக்கும். அரசாங்கம் என்பது நாமே. நாம் அனைவரும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தடுப்பூசியை முறையாக பெறுவதன் மூலமே அரசாங்கத்திடமிருந்து உதவிகளை பெறலாம்.

ஒரே தடைவையில் பல ஆயிரக்கணக்கானோர் தொற்றுக்குள்ளானால் வைத்திய சாலை தாங்காது. ஆகவே, தடுப்பூசி பற்றிய விழிப்புணர்வை அனைவரிடமும் ஏற்படுத்துங்கள். ஆகவே அனைவரும் சிந்தித்து செயல்படவேண்டும். இல்லாவிட்டால் 2 அல்லது 3 வாரங்களுக்கு நாட்டை முடக்கம் செய்தால் உணவு பண்டங்களின் விலைகள் ஏறி அனைவரின் வாழ்க்கையும் மாறிவிடும் - என்றும் சொன்னார். (ஐ)

# ஐவர் கைது!

கொழும்பு, ஜன.1

அம்பாறை, இங்கினியாகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பகஹவெல்ல பிரதேசத்தில், புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஐவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை, தடயமத்தலாவ, அம்பாந்தோட்டை, அம்பலாங்கொடை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 36,47,50,55 மற்றும் 63 வயதுடைய ஐவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

### முட்டை வீச்சு தாக்குதல்:

# பாரபட்சமற்ற விசாரணை நடத்துமாறு வேண்டுகோள்!

கொழும்பு, பெப்.1

கம்பகா கலகெடிஹேன பிரதேசத்தில், தேசிய மக்கள் சக்திக்கு முட்டை வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் முறையான பாரபட்சமற்ற விசாரணைகளை நடத்துமாறு சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ்மா அதிபரிருக்கு கடிதம்மூலம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். அதில் மேலும் குறிப்பிட்டுள்ள அவர்,

குறித்த பிரதேசத்தில் நேற்றைய தினம் தேசிய மக்கள் சக்திக்கு முட்டைவீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்த சம்பவம் தொடர்பில் ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் பரவலான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனவே இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க பயணித்த காரின் மீது முட்டை வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவரை கட்சியின் ஆதரவாளர்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (கே)

# ஓட்டமாவடி மாணவனை 3 நாட்களாக காணவில்லை!

ஓட்டமாவடி, பெப். 01

ஓட்டமாவடியை சேர்ந்த பாடசாலை மாணவனை கடந்த மூன்று நாள்களாக காணவில்லை என பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

ஓட்டமாவடி - 01, பழைய மக்கள் வங்கி வீதியில் வசிக்கும் மன்சூர் அன்ஸப் (வயது - 17) என்ற மாணவனே கடந்த வெள்ளிக்கிழமை மாலை 03 மணியளவில் வீட்டை விட்டு வெளியேறிய நிலையில் காணாமற்போயுள்ளார்.

அவரின் சைக்கிள், மேற்சட்டை மற்றும் பாதணி என்பன பாசிக்குடா யானைக்கல் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை கண்டுடெடுக்கப்பட்டுள்ளன.



இதனால், காணாமல் போன மாணவன் கடலில் மூழ்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் சுழியோடிகள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதேவேளை, மாணவனின் கையடக்கத் தொலைபேசியைத் தொடர்புகொள்ளும் போது, அது பாவனையில் உள்ளதாகவும் ஆனால், மறுமுனையில் இருந்து எந்தப் பதிலும் இல்லை என்றும் மாணவனின் தந்தை தெரிவித்தார்.

இந்த மாணவன் தொடர்பான தகவல்கள் ஏதும் கிடைத்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது அவரது தந்தையின் கைபேசி 077 358 7875 இலக்கத்துக்கோ தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

காணாமல் மாணவன், ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் விஞ்ஞான பிரிவில் முதலாம் வருடத்தில் கல்வி கற்று வருபவர் என்பதுடன், 2020ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதார தரப் பரீட்சையில் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரேஸில் நாட்டில் கடும் வெள்ளம்!

## 7 குழந்தைகள் உட்பட 19 பேர் உயிரிழப்பு



பிரேசிலியா, பெப். 01

பிரேஸிலின் சாவ் பாலோ மாநிலத்தில் நிலச்சரிவு மற்றும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் 7 குழந்தைகள் உட்பட குறைந்தது 19பேர் உயிரிழந்துள்ளனர் என பொது பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சாவோ பாலோ மாநில அதிகாரிகளின் கூற்றுப்படி, மழையில் மேலும் ஒன்பது பேர் காயமடைந்தனர் மற்றும் நான்கு பேர் காணவில்லை. அதே நேரத்தில் மாநிலம் முழுவதும் சுமார் 500 குடும்பங்கள் வீடற்ற நிலையில் உள்ளனர்.

சாவ் பாலோ ஆளுனர் ஜோவோ டோரியா, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு சென்று, பாதிக்கப்பட்ட நகரங்களுக்கு 15 மில்லியன் ரியாஸ் ( 2.79 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) அவசர உதவியை வழங்க அனுமதித்துள்ளதாக கூறினார்.

இது குறித்து மத்திய அரசாங்கம் தொடர்ந்து கண்காணித்து வருவதாக மண்டல மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரிய சாவோ பாலோவைச் சுற்றியுள்ள மிகக் கடுமையான பாதிப்புக்குள்ளான நகராட்சிகளில் அருஜா, பிரான்சிஸ்கோ மொராடோ, எம்பு தாஸ் ஆர்ட்ஸ் மற்றும் பிராங்கோ டா ரோச்சா ஆகியவை அடங்கும்.

புயல்கள், வர்சியா பாலிஸ்டா, காம்போ லிம்போ பாலிஸ்டா, ஜாவ், கேபிவாரி, மான்டெமோர் மற்றும் ரபர்ட் ஆகிய இடங்களிலும் சேதங்களை ஏற்படுத்தியதாக மாநில அதிகாரிகள் தெரிவித்தனர்.

டிசெம்பரில் இருந்து, கன மழையால் வடகிழக்கு பிரேஸிலில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது, மத்திய மேற்குப் பகுதியில் அறுவடைகளை தாமதப்படுத்தும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது மற்றும் மினாஸ் ஜெரெய்ஸ் மாநிலத்தில் சுரங்க நடவடிக்கைகளை சிறிது நேரம் நிறுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.



# காந்தியின் அஸ்தி தம்மிடம் இருப்பதாக கூறி அமெரிக்காவைச் சேர்ந்த ஆச்சிரமம் சர்ச்சை

வொஷிங்டன், பெப். 01

மகாத்மா காந்தியின் அஸ்தி தங்களிடம் இருப்பதாக அமெரிக்காவைச் சேர்ந்த ஆசிரமம் ஒன்று கூறியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

1948 ஆம் ஆண்டு காந்தி படுகொலை செய்யப்பட்டதால் இறுதிச் சடங்குகளுக்குப் பின் அவரது அஸ்தி 20 இற்கும் மேற்பட்ட பகுதிகளாக பிரிக்கப்பட்டு பல்வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. இதில் சில வெளிநாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் காந்தி உலக அமைதி நினைவுச் சின்னம் உள்ளது.

இதனை 1950 இல் பரமஹன்ச யோகானந்தா என்பவர் நிறுவியதாகக் கூறப்படுகிறது. தற்போது அங்கு காந்தியின் அஸ்தி இருப்பதாகக் கூறப்படுகிறது. இதனை காந்தியின் வழித்தோன்றல்கள் மறுத்துள்ளனர். (அ)



# 'மிஸ் அமெரிக்கா' அழகி தற்கொலை

நியூயோர்க், பெப். 01

2019 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற 'மிஸ் அமெரிக்கா' அழகிப்போட்டியில் பட்டம் வென்றவர் ஜாஸ்லி ரிஸ்ட். இவர் மொடலிங் துறையிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பணியாற்றி வந்தார்.

ஜாஸ்லி ரிஸ்ட் நியூயார்க் மாகாணத்தில் உள்ள மென்ஹெண்டன் நகரில் 60 மாடிகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பில் 9ஆவது மாடியில் உள்ள வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், ஜாஸ்லி ரிஸ்ட் தான் வசித்துவந்த 60 மாடி கட்டடத்தில் இருந்து கிழே குதித்து நேற்று தற்கொலை செய்துகொண்டார்.

ஜாஸ்லி கடைசியாக கட்டடத்தின் 29ஆவது மாடியில் நின்றுகொண்டிருந்தமை சிசிரிவி காட்சியில் பதிவாகியுள்ளது. அதன்பின்னர் அவர் எந்த சிசிரிவி காட்சியிலும் பதிவாகவில்லை. இதனால், அவர் கட்டடத்தின் 29ஆவது மாடியில் இருந்தே கிழே குதித்து தற்கொலை செய்திருக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

தற்கொலை செய்துகொள்வதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் ஜாஸ்லி ரிஸ்ட் தனது இஸ்ட்ராகிராம் பக்கத்தில், 'இந்த நாள் உங்களுக்கு ஓய்வையும் அமைதியையும் கொண்டு வரும்' என பதிவிட்டுள்ளார்.

இந்த தற்கொலை தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மிஸ் அமெரிக்கா பட்டம் பெற்ற ஜாஸ்லி ரிஸ்ட் 60 மாடி கட்டடத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# இத்தாலி ஜனாபதிபதியாக செர்ஜியோ இரண்டாவது தடவையாகவும் தெரிவு!

ரோம், பெப். 01

இத்தாலியின் ஜனாபதிபதியாக தற்போதைய ஜனாதிபதி செர்ஜியோ மெட்டரெல்லா, இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பிரதிநிதிகள் சபையில் 1,000 க்கும் மேற்பட்ட சட்டமியற்றுபவர்கள் மற்றும் பிராந்திய பிரதிநிதிகள் மத்தியில் எட்டாவது சுற்று வாக்கெடுப்பில், மேட்டரெல்லா 1009 வாக்குகளில் 759 வாக்குகளைப் பெற்று மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த வாரம் முறைப்படி பதவியேற்பு விழா நடைபெறவுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதியான மேட்டரெல்லாவின் ஏழு ஆண்டு பதவிக்காலம், பெப்ரவரி 3ஆம் திகதியுடன்



முடிவடைகின்றது.

ஆனால், 80 வயதான மேட்டரெல்லா, நீண்ட காலமாக பதவியில் நீடிப்பதை நிராகரித்திருந்தார். ஆனால் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதால், ஜனாதிபதி மாளிகையில் அவரைச் சந்தித்த பாராளுமன்றத் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவர் தனது முடிவை மாற்றிக்கொண்டார்.

1946இல் இத்தாலி குடியரசாக மாறியதில் இருந்து ஜியோர்ஜியோ நபோலிடானோ இரண்டாவது முறையாக பணியாற்றினார். ஆனால் அவர் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 2015இல் இராஜினாமா செய்தார்.

அரசியல் நெருக்கடிகளின் போது அரச தலைவர் கணிசமான அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தை கலைப்பது முதல் புதிய பிரதமர்களைத் தேர்ந்தெடுப்பது மற்றும் பலவீனமான கூட்டணிகளுக்கான கட்டளைகளை மறுப்பது வரையிலான அதிகாரங்கள் ஜனாதிபதி பதவிக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# இங்கிலாந்து சுகாதார ஊழியர்களுக்கு கட்டாய தடுப்பூசி ஏற்றல் அவசியமா?

லண்டன், பெப். 01

இங்கிலாந்தில் உள்ள தேசிய சுகாதார சேவை ஊழியர்க ளுக்கு கட்டாய கொவிட் தடுப்பூசிகளை இரத்து செய்யலாமா வேண்டாமா என்பதை அமைச் சரவை கூடி விவாதிக்கவுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள முன்கள தேசிய சுகாதார சேவை ஊழியர்கள், ஏப்ரல் 1ஆம் திக திக்குள் முழுமையாக தடுப்பூசி போடவேண்டும்.

இதற்கமைய அவர்கள் அனைவரும் வியாழக்கிழமைக்குள் முதல் டோஸ் அளவை பெற்றிருக்கவேண்டும்.

ஏப்ரல் மாதத்திற்குள் அவர் கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவிட்டால், அவர்கள் மீண்டும் பணியமர்த்தப்படு வார்கள் அல்லது பணிநீக்கம் செய்யப்படுவார்கள்.

தற்போது வரை தேசிய சுகா தார சேவை




ஊழியர்கள் தடுப் பூசி போடாமல் உள்ளனர்.

கடந்த வாரம், சுகாதார செயலாளர் சஜித் ஜாவித், 'தடுப்பூசி தேவை மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆனால், தடுப்பூசி போடுவது தேசிய சுகாதார சேவை ஊழியர்களின் கடமை' என்று கூறினார். (அ)

# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் நடால் புதிய சரித்திரம்!

மெல்பர்ன், பெப். 01

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் ஆடவர் பிரிவு இறுதிப் போட்டியில், ரஷ்யாவின் மெத்டேவை வீழ்த்திய ஸ்பெயினின் ரபேல் நடால், 21ஆவது கிராண்ட்ஸ்லம் பட்டம்சூடி, ரென்னிஸ் உலகில் புதிய சரித்திரம் படைத்தார்.

ரென்னிஸ் ரசிகர்களை சிலிர்க்க வைத்த இந்த ஆட்டம், 5 மணி 24 நிமிடங்கள் வரை நீடித்தது. இதில் நடால் 2-6, 6-7(5), 6-4, 6-4, 7-5 என்ற செற் கணக்கில் மெத்டேவை வீழ்த்தினார்.

நேற்று முன்தினம் ஞாயிறுக்கிழமை அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் இறுதிப் போட்டியில், ரஷ்ய வீரர் டேனில் மெத்டேவ் - ஸ்பெயினின் ரபேல் நடால் மோதினர்.

ஆரம்பம் முதலே பரபரப்பும் - விறுவிறுப்பும் தொற்ற முதல் செற்றில் மெத்டேவ் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, 6-2 என்ற கணக்கில் வென்றார். இதனால், இரண்டாவது செற்றில் விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லாமல் போனது. இந்த செற்றையும் மெத்டேவ்தான் வென்றார். எனினும், நடால் வீழ்ச்சியிலிருந்து மீண்டு வந்து, கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்தினார். இரண்டாவது செற்றை மெத்டேவ் 7-6 (7-5) என்ற கணக்கில் வென்றார்.

அவுஸ்திரேலிய ஓப்பனில் சம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பு மிகுந்திருந்த மெத்டேவுக்கு, வழக்கமான ஆட்ட நேர்த்தியால் மூன்றாவது செற்றில் அதிர்ச்சி கொடுத்தார் நடால். அந்த செற்றை 6- 4 என்ற கணக்கில் வசப்படுத்தி முன்னேற ஆரம்பித்தார். அதே உறுதியான ஆட்டத்தை நான்காவது செற்றிலும் வெளிப்படுத்தி, அதையும் 6-4 என்ற கணக்கில் வசப்படுத்தினார். மெத்டேவும் இயன்றவரையில் போராடினார்.

ஆனால், மீண்டெழுந்த நடால் சளைக்காது ஆடினார்.

நடாலின் வெற்றியை உறுதி செய்த ஐந்தாவது செற்றிலும், ஆரம்பத்திலேயே அவர் ஆதிக்கம் செலுத்தினார். இந்த செற்றில் 5-3 என்ற நிலையில் முன்னிலை வகித்த நடாலுக்கு மீண்டும் அதிர்ச்சி தந்தார் மெத்டேவ். இதன்பின் அடுத்தடுத்து இரண்டு கேம்களை வசப்படுத்தி 5-5 என்ற சமநிலைக்கு வந்தார் மெத்டேவ். ஆட்டம் விறுவிறுப்பின் உச்சத்துக்கே சென்றது.



ஆனால், இறுதி இரண்டு கேமையும் நடால் வெல்லவே, வெற்றிவாய்ப்பை மயிரிழையில் இழந்தார் மெத்டேவ். இறுதியில், இறுதி செற்றை நடால் 7-5 என்ற கணக்கில் வெற்று, அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் ஆடவர் பிரிவு சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி, 21 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்ற முதல் வீரர் என்ற மகத்தான சரித்திரத்தை நிகழ்த்தினார்.

இதற்கு முன் இவ்விருவரும் நான்கு முறை மோதியிருக்கின்றனர். அதில், நடால் மூன்று முறையும், மெத்வதேவ் ஒரு முறையும் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

---



## இங்கிலாந்துக்கு எதிரான தொடர் மேற்கிந்தியத் தீவுகள் வசமானது!

### ஹோல்டர் 4 பந்துகளில் 4 விக்கெட்

பார்படோஸ், பெப். 01

ஜசன் ஹோல்டர் 4 பந்துகளில் 4 விக்கெட்களை கைப்பற்றி அசத்த இங்கிலாந்து அணியை 17 ஓட்டங்களால் வெற்றி கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி, 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரையும் 3 - 2 என்ற கணக்கில் தன்வசமாக்கியது.

பார்படோஸில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட் இழப்புக்கு 179 ஓட்டங்களை குவித்தது.

ஆரம்ப வீரர்களான பிரண்டன் கிங் 34 ஓட்டங்கள் மற்றும் கைல் மேயர்ஸ் 31 ஓட்டங்கள் என நல்லதொரு ஆரம்பத்தை ஏற்படுத்தினர்.

எனினும், அவர்களின் ஆட்டமிழப்பையடுத்து களமிறங்கிய ரொமாரியோ ஷெப்பர்ட் 6 ஓட்டங்களுடனும், நிக்கோலஸ் பூரன் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஒரு கட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் 14.4 ஓவர்களில் 105 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்களைப் பறிகொடுத்து தடுமாறியது.

எனினும், அணித் தலைவர் கிரன் பொலார்ட் மற்றும் ரோவ்மேன் பவல் இணைந்து சிறப்பான ஆட்டத்தை ஏற்படுத்த அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

இதனால், 20 ஓவர்கள் நிறைவில் 179ஆக உயர்ந்தது. இதில், இரு வீரர்களும் இறுதி நான்கு ஓவர்களில் 66 ஓட்டங்களை விளாசினர். இறுதி வரை ஆட்டமிழக்காதிருந்த கிரன் பொலார்ட் 41 ஓட்டங்கள் (25பந்துகளில்) ஓட்டங்களையும், ரோவ்மேன் பவல் 35 ஓட்டங்கள் (17 பந்துகளில்) பெற்றனர்.

180 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 19.5 ஓவரில் 162 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

ஜேம்ஸ் வின்ஸ் 55 ஓட்டங்களையும் சாம் பில்லிங்ஸ் 41 ஓட்டங்களையும் அதிகப்படியாக பெற்றனர். போட்டியின் இறுதி ஓவரில் ஜசன் ஹோல்டர் 4 பந்துகளில் 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதனால், 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் 3-2 என இருபது - 20 தொடரை கைப்பற்றியது.

மேற்கிந்தியாவின் பந்துவீச்சில் ஹோல்டர் 5 விக்கெட்களையும், ஹொசைன் 4 விக்கெட்களையும் , ஒடியன் ஸ்மித் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்நிலையில் இருபது - 20 போட்டிகளில் 4 பந்துகளில் 4 விக்கெட் வீழ்த்திய நான்காவது வீரர் என்ற பெருமையை ஜசன் ஹோல்டர் பெற்றார்.

இவருக்கு முன்னதாக, அயர்லாந்தின் காம்பெர், இலங்கையின் லசித் மலிங்க மற்றும் ஆப்கானிஸ்தானின் ரஷீத் கான் ஆகியோர் தொடர்ந்து 4 பந்துகளில் 4 விக்கெட் வீழ்த்தி உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

## ரென்னிஸ் தரவரிசை ஜோகோவிச் முதலிடம்!

லண்டன், பெப். 01

ரென்னிஸ் வீரர்களுக்கான தரவரிசையில் ஆண்கள் பிரிவில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் முதலிடத்தைத் தக்கவைத்துள்ளார்.

கிராண்ட்ஸ்லம் போட்டியான அவுஸ்திரேலிய ஓப்பனில் பங்கேற்க அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டபோதும்கூட அவர் தனது இடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துள்ளார்.

நேற்று வெளியான தரவரிசைப் பட்டியலின்படி, ஜோகோவிச் முதலிடத்தில் நீடிக்க, ரஷ்யாவின் டேனில் மெத்டேவ், ஸ்பெயினின் நடால் முறையே 2, 5ஆவது இடங்களில் நீடிக்கின்றனர்.

அரையிறுதி வரை சென்ற இத்தாலியின் பெர்ரேட்டினி, 6ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். (ஐ)

---



## உலக கிண்ண தொடர் ஜப்பான் மகளிர் தகுதி!

மும்பை, பெப். 01

பெண்களுக்கான ஆசிய கிண்ண உதைபந்தாட்ட அரையிறுதிக்கு முன்னேறிய ஜப்பான் அணி, 'பிபா' உலகக் கிண்ணத் தொடரில் விளையாட தகுதி பெற்றது.

இந்தியாவில், பெண்களுக்கான ஆசியக் கிண்ண உதைபந்தாட்டத்தின் 20ஆவது தொடர் நடக்கிறது.

காலிறுதியில் ஜப்பான், தாய்லாந்து அணிகள் மோதின. தொடக்கத்தில் இருந்து கோல் மழை பொழிந்த ஜப்பான் அணி 7-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. ஜப்பான் சார்பில் சுகசவா 4 (27, 65, 80, 83வது நிமிடம்), மியாஜவா 2 (45,52வது), சுமிடா (48வது), ரிகோ யூகி (75வது) தலா ஒரு கோல் அடித்தனர்.

இதன்மூலம் ஜப்பான் அணி, அடுத்த ஆண்டு (ஜூலை 20 - ஒக. 20) அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடக்கவுள்ள பெண்களுக்கான 'பிபா' உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் விளையாட தகுதி பெற்றது. (ஐ)

---

## ரென்னிஸ் தரவரிசை முதலிடத்தில் ஆஷ்லே

லண்டன், பெப். 01

சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி முதல் இடத்தைத் தக்கவைத்துள்ளார்.

கிராண்ட்ஸ்லம் போட்டியான அவுஸ்திரேலிய ஓப்பன் தொடர் முடிவடைந்ததைத் தொடர்ந்து ரென்னிஸ் வீரர்களுக்கான தரவரிசை நேற்று வெளியிடப்பட்டது.

இதில், பெண்களுக்கான பிரிவில், அவுஸ்திரேலிய ஓப்பன் சம்பியனைக் கைப்பற்றிய ஆஷ்லே பார்டியே மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

இந்தத் தொடரில் இறுதியாட்டம் வரை சென்று, இரண்டாவது இடம் பிடித்த அமெரிக்காவின் கொலின்ஸ், 30ஆவது இடத்தில் இருந்து 10ஆவது இடத்துக்கு முன்னேறினார்.



செக் குடியரசின் பார்போரா கிரெஜ்சிகோவா, 3ஆவது இடத்துக்கு முன்னேறினார். பெலாரசின் அரினா சபலென்காவும் இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார்.

போலந்தின் இகா ஸ்வியாடெக், 9ஆவது இடத்தில் இருந்து 4ஈவது இடத்துக்கு முன்னேறினார். ஸ்பெயினின் கார்பைன் முகுருஜா, 3வது இடத்தில் இருந்து 7ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். (ஐ)

# நாட்டை முடக்குமாறு பல தரப்பும் கோரிக்கை

### ஆயினும் இன்னும் முடிவில்லை

கொழும்பு, பெப். 01

நாட்டை முடக்குமாறு பல்வேறு தரப்பினர் விடுத்து வரும் கோரிக்கை தொடர்பில், எவ்வித் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

எனினும், இத்தருணத்தில் நாட்டை முடக்குவது பிரச்னைக்குத் தீர்வாகாது என்றும் அவர் கூறினார்.

நாடு திறந்திருக்கும்போதே, கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றுவதன் வேகம் அதிகரித்துள்ளமையால், சகலரும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

# சதொச ஊடாக தேங்காய் ஒன்றின் விலை 75 ரூபாய்

கொழும்பு, பெப். 01

லங்கா சதொச விற்பனை நிலையம் ஊடாக தேங்காய் ஒன்றை 75 ரூபாய் நிலையான விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று தெரிவித்தார். முன்னோடித் திட்டமாக கொழும்பு மாவட்டத்தில் முதன் முறையாக இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

நாட்டில் தேங்காய் விலை அதிகரித்துள்ள நிலையில் நுகர்வோருக்கு குறைந்த விலையில் தேங்காய் வழங்கும் நோக்கில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சும், தென்னை ஆராய்ச்சி நிறுவனமும் வர்த்தக அமைச்சு மற்றும் லங்கா சதொச நிறுவனத்துடன் நேற்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. (அ)


## மரண அறிவித்தல்



மலர்வு 31 - 09 - 1949

உலர்வு 30 - 01 - 2022

**இராயப்பு இம்மானுவேல் இராசநாயகம் (இராசா)**

(இளைப்பாறிய துறைமுக அதிகாரசபை ஊழியர்)

ஊர்காவற்துறை நாரந்தனையை பிறப்பிடமாகவும் கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.இராயப்பு இம்மனுவேல் இராசநாயகம் அவர்கள் 30.01.2022 ஞாயிறன்று தனதில்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருதிருமதி இராயப்பு (செல்லத்தம்பி) - அக்னேஸ் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - திருமதி பிலோமினா (கொழும்பு) ( இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மருமகனும் எல்சியின் அன்புக் கணவரும் டினேஸ் டெறிக்,மிறியம் டிலானி அன்ரன் மோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் லக்சி,அன்ரன் மோகன் (ஜெகன்)ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மரியநாயகம்,மற்றும் கொலஸ்ரிக்கா(அழகம்மா), சூசைதாசன் (எலியாஸ்), பொலின் வயலற் (பவுலின்), மரியம்மா,பிரான்சிஸ் (துரை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜொய்சி, காலஞ்சென்றவர்களானஅன்ரன், கொன்சி மற்றும் அன்ஸ்லி ரவிக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் டெனி, அன்ட்ரியா, அட்லினா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 31.01.2022 திங்களன்று காலை 9 மணி முதல் வத்தளை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3.00 மணிக்கு வத்தளை நாயக்ககந்த காணிக்கை மாதா தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் வத்தளை கெரவலப்பிட்டிய பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:
**டினேஸ்: 0777630717- இலங்கை**
**டிலானி : 0033652501032 - பிரான்ஸ்**

தகவல்:
**குடும்பத்தினர்.**








# ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி யாழில் கறுப்பு ஜனவரி கவனயீர்ப்பு

### பஸ் நிலையம் முன்பாக நடந்தது

யாழ்ப்பாணம், பெப். 01

**ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை, தாக்கப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுத்து, நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணம் நகரில் நேற்று 'கறுப்பு ஜனவரி' கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக ஒன்றுகூடிய ஊடகவியலாளர்கள் கறுப்புக் கொடிகளை தாங்கியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன், இது தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் ஒத்துழைப்பையும் பெறும் நோக்கில் துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அனைத்து ஊடக அமைப்புக்களும் ஊடகவியலாளர்களின் பங்கேற்புடன் 'கறுப்பு ஜனவரி' போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-03)

# கோவிட் தொற்றால் மரணிப்போர் ஒமைக்ரோனால் பீடிக்கப்பட்டவர்களா என்று தெரிவிப்பது கடினமே!

### சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 01

நான்கு மாதங்களுக்குப் பின்னர் நாளாந்தம் பதிவாகின்ற கோவிட் நோயாளர்களின் எண்ணிக்கை நேற்றுமுன்தினம் 1000 ஐ கடந்திருந்தது. எனினும் தற்போது கோவிட் நோயாளர்கள் அதிகரிக்கின்றமை, அவர்களுக்கு சிசிக்சை வழங்கும் விடயத்தில் சுகாதார தரப்புக்கு பெரும் சவாலை ஏற்படுத்தாது என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

வ்வாறாயினும் மரணிப்பவர்கள் ஒமைக்ரோன் தொற்றால் பீடிக்கப்பட்டவர்களா என்பதைத் தெரிவிப்பது சிரமமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் நாளாந்தம் 4,000 என்ற அளவில் கோவிட் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டபோது, அவர்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது.

அது போன்று தற்போது நாளாந்தம் அடையாளம் காணப்படுகின்ற நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க முடியும். அதற்கான இயலுமை சுகாதாரக் கட்டமைப்பில் இருக்கிறது.

அதேநேரம் நாட்டில் தற்போது அடையாளம் காணப்படுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் ஒமைக்ரொன் திரிபால் பீடிக்கப்பட்டவர்கள்.

எவ்வாறாயினும் மரணிப்பவர்கள் ஒமைக்ரோன் தொற்றால் பீடிக்கப்பட்டவர்களா என்பதைக் தெரிவிப்பது சிரமமானது-என்றார். (அ)

# இயந்திரத்தால் கால்கள் அறுத்து ஒருவர் கொலை

### சிறிய தந்தை கைது

கொழும்பு, பெப். 01

மரம் வெட்டுவதற்காக பயன்படுத்தப்படும் இயந்திரத்தைப் பயன்படுத்தி, நபர் ஒருவரின் கால்களைத் துண்டாக்கி, அவரைக் கொலை செய்த சம்பவம் கட்டுகஸ்தோட்டைப் பகுதியில் பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் இருவருக்கிடையே வேலி எல்லைப் பிரச்னை தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதால், ஒருவர் மற்றையவரின் கால்களை மரம் வெட்டும் இயந்திரத்தைக் கொண்டு துண்டுகளாக்கியுள்ளார்.

இதனையடுத்து கால்கள் துண்டாக்கப்பட்ட நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 28 வயதான திருமணமாகாதவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வாறு கைது செய்யப்பட்டவர் உயிரிழந்தவரின் சிறிய தந்தை என்பதுடன், இவர் தொழில் ரீதியாக மரம் வெட்டும் தொழிலில் ஈடுபட்டு வருபவர் என்றும் தெரியவந்துள்ளது. (அ)

# அநுரகுமாரவின் மீது முட்டை வீசிய சம்பவம் தனக்கு தொடர்பில்லை என்கிறார் பிரசன்ன

கொழும்பு, பெப். 01

ஜே.வி.பியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுர திஸாநாயக்கவின் கார் மீது நடத்தப்பட்ட முட்டை வீச்சு தாக்குதலுக்கும் தனக்கும் தொடர்பில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே தாக்குதல் சம்பவம் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த சம்பவத்தில் தனக்கு தொடர்பு இருப்பதாக வெளியான செய்திகளை மறுத்து, ஜனாதிபதி மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

முட்டைத் தாக்குதலை நடத்தியவர்களுக்கும் அதனை நடத்த கூறியவருக்கும் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டுமென பிரசன்ன ரணதுங்க கூறினார். (அ)

## காணாமல்...

பிரேம்குமார், அருண்குமார் தணிகைமாறன் என்ற இரண்டு மீனவர்களுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் தொழிலுக்கு சென்ற இவர்கள் கரை திரும்பாத நிலையில், அவர்களை தேடிய போது, காணாமல்போன மீனவர்கள் பயன்படுத்திய வலைகள் அறுக்கப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டன.

இதையடுத்து அவர்கள் பயணித்த படகை பெரிய படகு - இந்திய இழுவைப் படகு மோதி மூழ்கடிக்கத்திருக்கலாம் என்று உறவினர்கள் அச்சம் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், ஆழியவளை பகுதியில் ஒருவரின் சடலமும், கேவிலுக்கு அண்மையாக கடலில் மிதந்த நிலையில் மற்றையவரின் சடலமும் மீட்கப்பட்டன. (ஐ-2)

## ஏற்கனவே...

என்ன என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்-

இது உள்நாட்டு பிரச்னை பல வருடமாக இடம்பெற்ற ஒரு பிரச்னை.

உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை ஒரு அதிக பிரச்னை உள்ள நாடு இல்லை.

அத்தோடு ஏற்கனவே நடந்த பிரச்னைக்காக நேரத்தையும் வீணடிக்கத் தேவையில்லை. தற்போது இந்த கொரோனா என்னும் நோய்க்கு முகம் கொடுப்பதால் பல மில்லியன் கணக்கில் பணத்தை செலவழித்துள்ளோம். அதாவது தடுப்பூசி மற்றும் ஏனைய செயற்பாடுகளை முன்னெடுத்து எமது நாட்டை கொரோனா நோயில் இருந்து காப்பாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றோம்.

தற்போது கொரோனா நிலைமை தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம்.

உள்நாட்டு பொறிமுறை மூலம் நடந்த பிரச்னைக்கு தீர்வு காண்பதே எமது நிலைப்பாடாக காணப்படுகின்றது.

தேசிய ஒற்றுமை ஒருமைப்பாடு என்பவற்றை நிலைநாட்டி உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்கி அதன் மூலம் தீர்வு வழங்குவதை எதிர்பார்க்கின்றோம். இந்த விடயத்தில் நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மிகவும் உறுதியாகவுள்ளார். அதனை செயற்படுத்த பல்வேறுபட்ட முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார்.

இன ஒற்றுமை மற்றும் நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு சாதகமான நிலை தற்போதைய கோட்டாபய அரசுக்கு கிடைத்துள்ளது. இனங்களுக்கிடையில் ஒற்றுமை நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கு ஒரு ஆரம்பப் புள்ளியாக இருக்கின்றது.

இது போதுமானதான விடயம் அல்ல என ஏற்றுக்கொள்கின்றோம். அதனை தொடர்ந்து செய்வதற்கு காலம் தேவை.

தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தில கூட மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே 42 வருடங்களின் பின்னர் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த 2015-2019 வரை இருந்த அரசாங்கத்தில் கூட பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றுமாறு கூட யாரும் கூறவில்லை- மாற்றியமைக்கப்படவுமில்லை.

தற்போதுள்ள கோட்டாபய அரசாங்கம் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தில்கூட மாற்றங்களை செய்துள்ளது. எனவே அவ்வாறு ஒரு முன்னேற்றகரமான ஒரு நிலை இருக்கின்றபோது ஐ.நா. சபையின் ஜெனிவா கூட்டத்தில் இந்த விடயங்களை எடுத்துரைக்க உள்ளோம்- என்றார். (அ-03)

## உத்தேச...

உத்தேச அரசமைப்பு உருவாக்கம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், யுத்த சுவடுகளை நட்டஈட்டால் மாத்திரம் ஈடுசெய்ய முடியாது. இறுதிக்கட்ட யுத்தத்திலும், அதற்கு முற்பட்ட காலத்திலும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் காலம் காலமாக பேசப்பட்டு வருகிறதே தவிர இறுதித் தீர்மானம் இதுவரையில் காணப்படவில்லை. காணாமல் ஆக்கபட்டோரின் உறவினர்கள் பல ஆண்டு காலமாக நீதி கோரி போராட்டத்தில் ஈடுபடுவது கவலைக்குரியது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நேர்ந்தது என்ன என்பதை தெரிந்து கொள்ளும் முழு உரிமையும் அவர்களின் உறவினர்களுக்கு உண்டு.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் ஆரோக்கியமான முன்னேற்றம் காணப்பட்டது என்பதை அரசியலுக்கு அப்பால்பட்ட நிலையில் இருந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததை தொடர்ந்து இனப்பிரச்னைக்கு தீர்வு காண சர்வகட்சி குழு மாநாட்டில் முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்களை செயல்படுத்தியிருந்தால் யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற பல பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றிருக்க முடியும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்கு தீர்வு வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. நாம் வாக்குறுதி வழங்கவில்லை என ஒரு போதும் தட்டிக்கழிக்க முடியாது. காணாமல் ஆக்கபட்டோரின் உறவினர்கள் அரசாங்கத்திடமிருந்து நியாயத்தை முழுமையாக எதிர்பார்க்கிறார்கள்.

தற்போதைய நிலவரத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் உத்தேச புதிய அரசியலமைப்பு ஊடாக இனப்பிரச்னைக்கு தீர்வு கிடைக்கப் பெறும் என்பதை தனிப்பட்ட முறையில் நம்பிக்கை கொள்ள முடியவில்லை. ஏனெனில், இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் வழிமுறை ஏனைய பிரச்னைகளுக்கு தீர்வு காணும் கோணத்தில் பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்னைக்கு தீர்வு காண அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து பொதுக் கொள்கைக்கு அமைய விரிவுபடுத்தப்பட்ட நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறான சூழல் தற்போது காணப்படவில்லை என்பதே உண்மை - என்றார். (ஐ)

## இந்திய...

போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றின் ஊடாக இந்திய மீனவர்கள் 55 பேரும் விடுதலையான பின்னர் வடக்கு கடலில் அத்துமீறும் இந்திய மீனவர்களின் அடாவடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் இந்திய மீனவர்களின் படகு இடித்து மோதித்தள்ளியதால் கடலில் வீழ்ந்ததாக அஞ்சப்படும் வடமராட்சி மீனவர்கள் இருவர் இதுவரை கரை திரும்பவில்லை.

அதேவேளை, கடற்கரைக்கு மிக நெருக்கமாக வரும் இந்திய இழுவைப் படகுகள் யாழ்ப்பாண மீனவர்களால் கடலில் விரிக்கப்பட்டிருக்கும் வலைகளை இலக்குவைத்து அறுப்பதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் கண்ணீர்மல்ல தெரிவித்தனர்.

போருக்குள் அனைத்தையும் இழந்து வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பப் பாடுபடும் யாழ்ப்பாண மீனவர்களின் பொருளாதாரத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் இந்திய மீனவர்கள் ஈடுபடுவதாக பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதனை எதிர்த்தே பருத்தித்துறை - சுப்பர்மடம் பிரதான வீதியில் இந்தியப் படகுகளால் அறுக்கப்பட்ட மீன்பிடி வலைகளை வீதியில் போட்டு மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து அவர்கள் தெரிவிக்கையில்-

தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றன. மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துமாறு பல்வேறு தரப்பினரிடமும் தொடர்ச்சியாக பல்வேறு தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்தோம். பல கட்டங்களாக போராட்டங்களை முன்னெடுத்தோம். இது எதற்குமே பயனில்லை. மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்கின்றன. அவர்களை கட்டுப்படுத்தவோ அவர்களை தடுத்து நிறுத்தவோ எவரும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வில்லை.

அத்துமீறி எமது எல்லைக்குள் நுழையும் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை விரட்டியடிக்க எம்மால் முடியும். ஆனால் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டும், நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தக்கூடாது என்ற எண்ணத்திலையே நாம் பொறுமை காக்கிறோம்.

அத்துமீறும் மீனவர்களை , அவர்களின் படகுகளுடன் சிறைப்பிடித்து எமது கரைக்கு கொண்டு வரவும் எம்மால் முடியும்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அதேவேளை , எமது பிரச்னைகள் தொடர்பில் இந்தியா கரிசனை கொள்ளாவிடின் நாம் சீனாவின் உதவியை நாட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம்.

கடற்தொழில் அமைச்சர் இது தொடர்பில், நடவடிக்கை எடுக்க முடியாவிடின் அவர் அமைச்சு பதவியில் இருந்து விலகுவதே சிறந்தது-என்றனர். (ஐ-2-3)

## வடக்கில்...

போதனா மருத்துவ மனையில் பெறப்பட்ட மாதிரிகளில் 14 பேருக்கும், சாவகச்சேரி மருத்துவமனையில் பெறப்பட்ட மாதிரிகளில் இருவருக்கும், நொதேர்ன் சென்றல் தனியார் மருத்துவமனையில் பெறப்பட்ட மாதிரிகளில் இருவருக்கும், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனை மூலம் கிடைத்த மாதிரிகளில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ)

## மறு அறிவித்தல்...

ஆணைக் குழு கடந்த வியாழக் கிழமை அறிவித்தி ருந்தது.

இதற்கமைய, மின் துண்டிப்பை அமுலாக்குவதற்கான அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்காக குறித்த ஆணைக்குழு நேற்று பிற்பகல் கூடியது.

இதன்போது மறு அறிவித்தல் வரை திட்டமிடப்பட்ட மின் துண்டிப்பை மேற்கொள்ளப்படமாட்டாது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மின்சார கட்டமைப்பில் கேள்வி மற்றும் விநியோகத்திற்கிடையில் 300 மெகாவோட் இடைவெளி உள்ள நிலையில், அதனை பெற்றுக்கொள்வதற்கு மின்சார சபை எந்த திட்டத்தையும் முன்வைக்கவில்லை என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில், இதனால் மார்ச் மாதம் அளவில் மின்சார துண்டிப்பை மேற்கொள்வதற்கு நேரிடும் என குறிப்பிட்டார். (அ)

## சுகாதார...

முறைப்படுத்தப்பட்ட சுகாதார வழிகாட்டுதல் கள் அடங்கிய சுற்றறிக்கையின் செல்லு படியாகும் காலம் எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது.

மக்களின் சுகாதாரப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

டிசெம்பர் மாத இறுதியில் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்கள் அடங்கிய சுற்றறிக்கை நேற்று வரை நாடு முழுவதும் நடைமுறையில் இருந்தது. இந்த நிலையில், திருத்தங்களுக்கு உட்பட்ட (சிறப்பு காரணங்களுக்கு மட்டும்) இந்த சுற்று அறிக்கை பெப்ரவரி 28ஆம் திகதி வரை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த கட்டுப்பாடுகள் மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களை பொது மக்கள் கடைபிடிக்குமாறு சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த முறை வெளியான சுகாதார வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டிருந்த சில முக்கிய விடயங்கள் வருமாறு,

திருமண நிகழ்வுகளின் போது மண்டபத்தின் வழமையான கொள்ளளவில் அதிகபட்சமாக 50 சதவீதம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எந்த நேரத்திலும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படும் மொத்த நபர்களின் எண்ணிக்கை 30 மட்டுமே.

அறிவுறுத்தல்களுக்கு இணங்காத நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராக தற்போதுள்ள சட்ட விதிகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

உணவகங்களில் உணவருந்துவோர், கடைகள், அங்காடிகள், மருந்தகங்கள், மளிகைக் கடைகள் ஆகியவற்றில் அவற்றின் கொள்ளளவில் 50 வீதமானோரே அனுமதிக்கப்படுவர்.

திரையரங்குகள் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களில் அதன் கொள்ளளவில் 75 சதவீதம் பேர் அனுமதிக்கப்படுவர்.

## திருமலை...

திணைக்களத் தினர் பூட்டுப் போட்டு மூடியுள்ளனர்.

இந்த விடயம் தொடர் பில், திருகோணமலை தமிழர் சமூகத்தின் இணைப்பாளர் ஆர். நிக்லஸ், செய்தியாளர் கள் மற்றும் புதிய உதயம் அமைப்பின் பிரதிநிதி யான எஸ்.பி ராஜூ உள்ளிட்டோர் நேற்றுமுன்தினம் அந்தப் பிரதேசத்துக்கு பொறுப்பான உப்பு வெளி பொலிஸ் பொறுப்பதிகாரியை சந்தித்து கேள்வி எழுப்பினர்.

இதன்போது, பொலிஸ் நிலையத்திற்கும், கோயில் மூடப்பட்டமைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் தொல்பொருள் அமைச்சினால் மூடுமாறு கூறப்பட்டதை அடுத்து தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மூடி தங்களுக்கு அறிவித்தல் வழங்கினர் என்று கூறினார்.

அத்துன், சிவன் கோயில் மூடப்பட்டமை தொடர்பில் எதுவித ஆவணங்களும் பொலிஸாருக்கு கிடைக்கவில்லை எனவும் நேற்றைய தினமே தொல்பொருள் திணைக்களத்தினரிடம் சிவன் கோயில் மூடப்பட்டமை தொடர்பான ஆவணங்களை பெற்றுத் தருவதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி மேலும் கூறினார் என்று ஆர். நிக்லஸ் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து தொல்பொருள் திணைக்களத்தின் திருகோணமலை பிராந்திய அதிகாரிகளிடம் வினவியபோது, “இரண்டு நாட்களுக்குள் இதற்கான தீர்வு வழங்குவதாக உறுதியளித்தனர்.” இருந்தபோதிலும், ஆலயத்தை மூடியமைக்கான சரியான காரணங்களை அவர்கள் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மரண அறிவித்தல்

பிறப்பு
16 - 12 - 1928



இறப்பு
26 - 01 - 2022

## திருமதி
## இரத்தினேஸ்வரி கனகலிங்கம்

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கனடா Scarboroughவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரி கனகலிங்கம் 26.01.2022 புதன்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் – இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி விசுவலிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற 'ஓவியமாமணி' விசுவலிங்கம் கனகலிங்கம்(VK - ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் ஓவியர்) அவர்களின் அன்புத் துணைவியும்,புகழேந்தி ( கண்ணன்– கனடா ), ரவீந்திரன் (ரவி – கனடா), கௌரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தாயாரும், ராதா, ரஞ்சனி, பொன் இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், நாரணி – திவ்யன் (ஐக்கிய அமெ ரிக்கா), அபிராம்(கனடா), Dr. அபிராமி (அவுஸ்திரேலியா), Dr. மயூரா(அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேத்தியும், நாகலட்சுமி, கனகம்மா, கனகலிங்கம், கண் மணி, பாக்கியலட்சுமி, இரத்தின சபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தம்பு, அப்புத்துரை, ஞானசவுந்தரி, முத்துத்தம்பி, ஆறுமுகம், பார்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

பார்வைக்கு :
Tuesday, 01 Feb 2022 6:00 PM - 9:00 PM
Wednesday, 02 Feb 2022 10:00 AM - 10:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

கிரியை :
Wednesday, 02 Feb 2022 10:30 AM - 12:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

தகனம் :
Wednesday, 02 Feb 2022 12:00 PM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
ரவி - மகன்
Mobile : +16473236919
Phone : +14164395888

தகவல்:
குடும்பத்தினர்

# யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்ட 43 இந்திய மீனவர்களுக்கே தொற்று!

யாழ்ப்பாணம், பெப். 01

யாழ்பாணம் சிறையிலிருந்த இந்திய மீனவர்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டபோதும் கொரோனா காரணமாக தாயகம் திரும்புவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்19 மற்றும் 21ஆம் திகதிகளில் 8 படகுகளுடன் கைது செய்யப்பட்ட 56 மீனவர்களும் கடந்த 25 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் நிபந்தனையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரையும் விமானம் மூலம் அனுப்பி வைக்க சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு விமானப் பயணம் மேற்கொள்வதற்காக அவர்களுக்கு பி. சி. ஆர் பரிசோதனை செய்தபோது 43 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனால் 14 நாட்கள் தனிமைப்படுத்தல் காலம் நிறைவு பெற்ற பின்பே தமிழ்நாட்டுக்கு அவர்கள் பயணிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரச சார்பற்ற நிறுவனங்களுடன் யாழில் அமைச்சர் பீரிஸ் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப். 01

வடக்கில் செயல்படும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸூக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் பங்கேற்றிருந்தார்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் செய்தியாளர்களுக்கு அவர் கருத்துவெளியிட்டபோது,

அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பானது ஒரு திருப்திகரமான சந்திப்பாக அமைந்தது. அபிவிருத்தியை செயல்படுத்துவதற்கு ஒரு பங்காளியாக இணைந்து செயல்படுமாறு அரச சார்பற்ற நிறுவனங்களை கோரியுள்ளேன். அரச சார்பற்ற நிறுவனங்கள் வடக்கில் சுற்றுலாத்துறையை சரியாகப் பயன்படுத்தி மேம்படுத்த முடியும்.

அத்துடன், வடக்கிலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை, வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களால் என்ன செய்யமுடியும் என்பது தொடர்பில் ஆராய்ந்தோம். வட பகுதியில் இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கையை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளேன் - என்றார்.

# கோவிட் அறிகுறி காணப்படின் சிறுவரை பாடசாலைக்கு அனுப்புவதை தவிருங்கள்

கொழும்பு, பெப். 01

கொவிட் 19 நோய் காரணமாக 12 வயதான சிறுமி ஒருவர் மரணித்த சம்பவம் தொடர்பாக மேலதிக தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாக, லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் பணிப்பாளர் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவரிடம் இந்த சம்பவம் தொடர்பில் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பி இருந்தனர்.

அதற்குப் பதில் வழங்கிய அவர், குறித்த சிறுமி அதீத நியுமோனியா காய்ச்சலால் உயிரிழந்தமை பிரேதப் பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார்.

இருந்தபோதும் குறித்த சிறுமி அதிக உடல்பருமனால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், எவ்வாறாயினும் இந்த மரணம் தொடர்பான மேலதிக விவரங்கள் சேகரிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், 12 வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்குத் தடுப்பூசி செலுத்துவது தொடர்பாக இன்னும் இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் வைத்தியர் ஜீ. விஜேசூரிய தெரிவித்தார்.

உலகின் பல நாடுகள் 5 வயதுக்கு மேற்பட்ட சிறார்களுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன.

எவ்வாறாயினும் இலங்கையில் இதனை நடை முறைப்படுத்துவதற்கான தீர்மானத்தை எடுக்கவில்லை.

அதற்கான விஞ்ஞானப்பூர்வ தரவுகள் பெறப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, சிறார்களுக்கு கொவிட் தொற்றுக் கான அறிகுறிகள் எவையேனும் இருப்பின் அவர்களைப் பாடசாலைக்கோ அல்லது பொது இடங்களுக்கோ அனுப்ப வேண்டாம் என்றும் வைத்தியர் விஜேசூரிய கோரியுள்ளார். (அ)

# கடலுக்கு சென்ற மீனவர் நேற்று சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, பெப். 01

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து நேற்றுமுன் தினம் மீன்பிடிக்கச் சென்ற காவத்தமுனை பகுதியை சேர்ந்த 74 வயதுடைய அச்சி முகம்மது ஆதம் பாவா என்ற மீனவர் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டார்.

ஆழ்கடலில் மார டைப்பு ஏற்பட்டதில் மீனவர் உயிரிழந்துள்ள தாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)



# மட்டக்களப்பில் உயிரிழந்தநிலையில் கரையொதுங்கிய ஆமை, டொல்பின்!

மட்டக்களப்பு, பெப். 01

மட்டக்களப்பு மாவட் டத்தின் மண்முனை தென் எருவில் பிரதேசத்திற்குட் பட்ட களுதாவளைக் கடற்கரைப் பகுதியில் இறந்த நிலையில் ஆமை ஒன்றும், டொல்பின் ஒன்றும் நேற்றுக் காலை கரை ஒதுங்கின.

காலை வேளையில் கடற்கரைக்குச் சென்றவர்களே இதனை அவதானித்துள்ளனர். சுமார் மூன்றரை அடி நீளமாக ஆமையும், 5 அடி நீளமான டொல்பினுமே இவ்வாறு இறந்த நிலையில் கரை ஒதுங்கின.

இவ்வாறு இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ள கடல்வாழ் உயிரனங்கள் தொடர்பில் மட்டக்களப்பு வனஜீவ ராசிகள் திணைக்கள அதிகாரி களுக்கு தெரியப் படுத்தியுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
*6.00 மணி* : பக்திப்பாடல்கள்
*6.30 மணி* : வணக்கம் டான்



*6.35 மணி* : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
*07.05 மணி* : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
*7.20 மணி* : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
*7.30 மணி* : இன்றைய பத்திரிகைகளில்
*8.30 மணி* : காலை செய்திகள்
*9.00 மணி* : கலாட்டா காலை-நேரலை
*10.30 மணி* : தொடர் நாடகம்
*11.00 மணி* : சொற்சமர்-மறுஒளிபரப்பு
*12.00 மணி* : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
*1.00 மணி* : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
*1.30 மணி* : சுப்பர் சீன்ஸ் - தெறி, பொன் மாணிக்கவேல் திரைப்படக் காட்சிகள்
*4.30 மணி* : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



*5.30 மணி* : குறுந்திரை நேரம்
*6.00 மணி* : சினிமா சினிமா
*6.30 மணி* : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்



**இரவு**
*7.00 மணி* : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



*8.00 மணி* : இரவுச் செய்திகள்
*9.00 மணி* : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
*10.00 மணி* : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**
*6.00 மணி* : சிரி சிரி சிரி
*8.00 மணி* : சிரிப்பு சரடிவெடி
*10.00 மணி* : ஒரு பட கொமடி
*11.00 மணி* : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
*1.00 மணி* : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
*3.00 மணி* : குண்டக்க மண்டக்க
*5.00 மணி* : ஒரு பட கொமடி
*6.00 மணி* : கொமடி கலாட்டா

**இரவு**
*8.00 மணி* : ஒரு படக்கொமடி
*9.00 மணி* : சிரிப்போ சிரிப்பு
*10.00 மணி* : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
*6.00 மணி* : பனிப்பூக்கள்
*7.00 மணி* : திசை எட்டும் இசை எட்டும்
*8.00 மணி* : வணக்கம் டான் மியூசிக்
*9.00 மணி* : மெல்லிசை
*10.00 மணி* : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
*12.00 மணி* : ராஜா ராணி
*1.00 மணி* : விசை இசை
*3.00 மணி* : வட்ஸ் அப் (நேரலை)
*4.00 மணி* : டீ டைம் ராகங்கள் (நேரலை)
*5.00 மணி* : இனிது இனிது
*6.00 மணி* : என்றென்றும் இசை
*7.00 மணி* : ஓய்வெடு நிலவே

**இரவு**
*8.00 மணி* : காற்றில் வரும் கீதம்
*9.00 மணி* : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
*5.15 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*6.00 மணி* : தரம் 07 - தமிழ்
*6.45 மணி* : தரம் 08 - தமிழ்
*7.30 மணி* : தரம் 09 - கணிதம்
*8.15 மணி* : தரம் 10 - கணிதம்
*9.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
*10.00 மணி* : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
*11.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
*12.00 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*1.00 மணி* : தரம் 07 - தமிழ்
*2.00 மணி* : தரம் 08 - தமிழ்
*3.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
*3.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*4.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*5.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
*5.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
*6.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
*7.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஸ்ரீ

**காலை**
*5.00மணி* : சிவாய மந்திரம்
*6.00 மணி* : சுப்ரபாதம்
*6.30 மணி* : சுப்ரபாதம்
*7.00 மணி* : இன்றைய சிந்தனை
*7.05 மணி* : இன்றைய நாள்
*7.20 மணி* : ஈழத்து சித்தர்கள்
*7.30 மணி* : மங்கள இசை
*8.00 மணி* : அருளுரை
*8.30 மணி* : திருவாசகம்
*9.00 மணி* : திருவிழா-01
*10.00 மணி* : பஜனை
*10.30 மணி* : தமிழககோவில் திருவிழா
*11.00 மணி* : பக்திமலர்

**பகல்**
*12.00 மணி* : திரையில் பக்தி
*12.30 மணி* : திருவிழா-02
*6.00 மணி* : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
*7.00 மணி* : செய்திகள்
*7.30 மணி* : அருளுரை
*8.00 மணி* : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
*7.00 மணி* : நாளொரு நற்சிந்தனை
*8.00 மணி* : ஜெபமாலை
*9.30 மணி* : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
*10.00 மணி*: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
*10.30மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம்)
*11.30 மணி* : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
*12.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*01.00 மணி* : திருப்பலி (மட்டக்களப்பு)
*03.00 மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
*04.00 மணி*: திருப்பலி (மட்டக்களப்பு)
*05.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*06.00 மணி* :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
*06.00 மணி* : இயேசுவின் போதனைகள்
*07.30 மணி* : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
*6.00 மணி* : கிராத்
*7.00 மணி* : இறை சிந்தனை
*7.30 மணி* : இஸ்லாமிய பாடல்
*8.00 மணி* : கலந்துரையாடல்
*9.00 மணி* : இஸ்லாமிய சீரிஸ்
*10.00 மணி* : மனதோடு பேசலாம்
*10.30 மணி* : கண் வசண்ணம் கை வண்ணம்
*11.00 மணி* : சுவனப்பாதை
*11.30 மணி* : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
*12.00 மணி* : லுகர் அதான்
*12.30 மணி* : இஜ்லாமிய வரலாறு
*1.00 மணி* : இஸ்லாமிய திரைப்படம்
*2.00 மணி* : கஸீதா
*2.30 மணி* : இறை சிந்தனை
*3.00 மணி* : பாடல்கள்
*3.30 மணி* : பள்ளிவாசல் ஆவணப்படம்
*4.00 மணி* : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
*5.00 மணி* : இறை தென்றல்
*6.00 மணி* : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
*7.00 மணி* : பிறை பிரசங்கம்
*8.00 மணி* : இஸ்லாமிய வரலாறு